பாகனேரி, த. வை. இ. தமிழ்ச்சங்க வெளியீடு—ரு

ஓம்

பட்டினத்துப்பிள்ளையார்

# திருப்பாடல்கள்.

பாகனேரி
வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன்
செட்டியாரவர்கள்
வெளியிட்டது.

---

கிடைக்குமிடம்:
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி : : சென்னை

விக்கிரம—கார்த்திகை

பாகனேரி, தனவைசிய

இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடாகத்

திருவாளர்

# வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

வெளியிடப்பெற்றது.

---

இவ்வெளியீட்டினால் கிடைக்கப்பெறுகிற, சிறிய

ஊதியமட்டும் இச்சங்கத்தின்

மேற்பார்வையிலுள்ள

திருவள்ளுவர் நூல் நிலையத்திற்கு

உரிமையாக்கப்பெறும்.

என்

# அருமை அன்னையார்

திருவாட்டி

வள்ளியம்மை ஆச்சி

அவர்களின் நினைவுக்காக

இந்நூல் அச்சிட்டு

வெளியிடப்பெற்றது.

# பதிப்புரை

**பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள்** என்னும் இந் நூல் ஒன்றே சில பதிப்புக்களாக வெளிவந்திருப்பினும் யான் வெளியிட்ட **திருவாசகம், தாயுமானவர் பாடல்கள்** என்ற நூல் களின் தொடர்பாக ஒரே அளவில் குறைந்த விலைக்கு இதனை அச்சிட்டுப் பரப்பும் அவாவினால் இப் புதிய பதிப்பு வெளிவரு கின்றது. இதன்கண் பதினோராந் திருமுறையிலுள்ள **பட்டினத் தார் பாடல்களும், பிறவும்** அடங்கியுள்ளன. இதைப்போன்றே வேறு சில அரிய நூல்களையும் குறைந்த விலைக்கு அச்சிட்டுக் கொடுக்க யான் எண்ணியிருக்கின்றேன். அவை இனிதே வெளிவரத் திருவருட் டுணையை நாடி நிற்கின்றேன்.

இப் பதிப்பினை மிகவும் அழகாய் அச்சிட்டு வெளிப்படுத்தி விற்பனை செய்துதர ஏற்றுக்கொண்ட **திருநெல்வேலித் தென் னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கும்,** இதனை அச்சிடுகையில் பிழை திருத்தம் பார்த்துதவிய வித்துவான் **திரு. ம. இராசமாணிக்கம் பிள்ளை** அவர்கட்கும் எனது உள மிகு நன்றி உரியதாகும்.

இவ் வெளியீட்டின் விற்பனையிலிருந்து கிடைக்கப்பெறு கிற சிறிய ஆதாய மட்டும் பாகனேரி, தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் பார்வையிலுள்ள திருவள்ளுவர் நூல் நிலையத் திற்கு உரிமையாக்கப் பெறும்.

தமிழன்பர்கள் இப் பதிப்பினையும் இச்சங்கத்தின் ஏனைய வெளியீடுகளையும் வாங்கிப் போற்றி எனது நூல் வெளியீட் டுப் பணிக்கு ஊக்கம் அளிப்பார்களாக.

**மு. காசிவிசுவநாதன்.**

# பொருளடக்கம்

## [பதினோராந் திருமுறையிலுள்ளது]


| | |
|---|---|
| கோயில் நான்மணிமாலை | ௧ |
| திருக்கழுமல மும்மணிக் கோவை | ௧௯ |
| திருவிடைமருதூர் மும்மணிக் கோவை | ௩௮ |
| திருவேகம்பமுடையார் திருவந்தாதி | ௫௮ |
| திருவொற்றியூர் ஒருபாஒருபது | ௭௪ |


## [பிற பாடல்கள்]


| | |
|---|---|
| கோயில் திருவகவல் | ௮௨ |
| கச்சித் திருவகவல் | ௮௬ |
| திருவேகம்ப மாலை | ௮௯ |
| திருவேகம்ப விருத்தம் | ௯௫ |
| திருத்தில்லை | ,, |
| திருச்செங்காடு | ௯௮ |
| திருவொற்றியூர் | ,, |
| திருவிடைமருதூர் | ௯௯ |
| திருக்கழுக்குன்றம் | ,, |
| திருக்காளத்தி | ,, |
| கயிலாயம் | ௱ |
| மதுரை | ௱௧ |
| பொது | ௱௨ |
| திருவிடைமருது | ௱௰ |

| | |
|---|---|
| திருவொற்றியூர் | ௱கக |
| திருவேகம்பம் | ,, |
| திருக்கச்சிக்காரோணம் | ,, |
| திருக்காளத்தி | ௱கஉ |
| திருவிருப்பையூர் | ,, |
| திருவையாறு | ,, |
| திருக்குற்றாலம் | ,, |
| பொது | ,, |
| தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையிற் பாடியவை | ௱கரு |
| திருவெண்காட்டுத் திருவிசைப்பா | ௱கஅ |
| திருமண வீட்டிற் பாடியது | ௱ககூ |
| உடற்கூற்று வண்ணம் | ,, |
| பாட்டு முதற்குறிப்பகராதி | ௱உரு |

உ

திருச்சிற்றம்பலம்

# பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு

சோழவளநாட்டிலே, காவிரி கடலொடு கலக்குமிடத்தில் எல்லா வளங்களும் ஒருங்கே நிறைந்து சோழ அரசர்க்கொரு தலைநகராயும் விளங்கிவந்த நகரம் காவிரிப்பூம்பட்டினமென்பது. அப்பட்டினத்திலுள்ளவர்கள் எந்தப் பொருளையும் விரும்பி வேறொரு பட்டினத்துட் புகாராதலின், அப்பட்டினத்துக்குப் 'புகார்' என்னும் வேறொரு பெயருமுண்டென்ப. அது செல்வம் நிரம்பிய பட்டினமாய்த் திகழ்ந்தமையால், அங்கு வணிகக் குடிமக்களே பெரும்பான்மையராய் வாழ்ந்து வந்தனர்.

அவர்களுள், அன்பு அருளொழுக்கங்களுட் சிறந்து சிவனடிப் பேரன்பும் மிக்குச் சிறந்த செல்வமுடையராய்ப் பெருவாழ்வில் வைகிய **சிவநேய**ரென்பா ரொருவ ரிருந்தார். அவரைச் **சிவநேய குந்த** ரென்றுங் கூறுப. அவர்க்குக் கற்புக்கினிய காதன் மனைவியாராய் வாழ்க்கைப்பட்டவர் **ஞானகலை** என்னும் அம்மையார். இவர் தாம் முன் செய்த நல்வினைப் பெருக்கின் பயனாகத் திருவருளால் ஓர் ஆண்மகவினைப் பெற்று மகிழ்ந்தார். அம் மகவு காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகேயுள்ள 'திருவெண்கா'டென்னுந் திருக்கோயிலிலெழுந்தருளியிருக்குஞ் சிவபிரானின் திருவருளால் தோன்றியதாதலின், திருவெண்காடரென்னுந் திருப்பெயர் பெற்றுத் தம் தந்தையாரின் பெருஞ் செல்வத்திற் கேற்பச் செழுமை தழையத் தொட்டிலிற் கிடந்துந் தவழ்ந்துந் தளர்நடை பயின்றும் மழலை மொழிந்தும் ஓடியாடியும் வளர் நிலவென வளர்ந்து ஐந்தாண்டுகள் நிரம்பியது.

அப்போது சிவநேயரென்பார் சிவபெருமான் திருவடி நீழலெய்தலும், அவர்க்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களையெல்லாந் திருவெண்காடர் தமது சிறு பருவத்திலேயே செய்து முடிக்க நேர்ந்தது.

அதன் பின்னர்த் திருவெண்காடர் நல்லாசிரியரொருவரை யணுகி, இலக்கண இலக்கியங்களோடு எல்லா அறிவுநூற் கலைகளையும் முறையாகப் பழுதறவோதி நல்லொழுக்கமுடையராய், யாவருங் கண்டு வியந்து மகிழுமாறு ஒழுகினர். அப்பொழுதே அவர் தமக்கு உயிர்க்குயிராய் நிற்குஞ் சிவபிரான் திருவடிகளையே மெய்த்துணையென நம்பிப், பேரன்பு செலுத்திப் பிறவிநோய் தீரும் வழியை உன்னி உயிருருகுவது வழக்கம். எனினும், ஆன்றோர் சென்ற அறநெறிவழியே நேர் நின்று, தமக்குப் பதினாறாண்டுடைய காளைப் பருவம் வந்தெய்துதலும் அக்காவிரிப்பூம்பட்டினத்திலேயே எல்லா வகையினுந் தம்மோடொத்த குலமரபினராய்த் திகழ்ந்த **சிவசிதம்பரச் செட்டியாரும்**, அவர் காதல் மனைவியார் **சிவகாமி அம்மையாரும்** பலபகல் திருவருள்வேண்டி அரிதின் பெற்றெடுத்த **சிவகலை** யென்னும் அருந்தவப் பெண்மணியை விதிப்படி மணந்து இல்வாழ்வென்னும் பெருந்தண் வாழ்க்கையி லமர்ந்திருந்தார். இல்வாழ்க்கையினை மேற்கொண்டார்க்குப் பொருள் தேடித் தொகுத்தல் இன்றியமையாததாகலின், நம் திருவெண்காடருந் தமது மரபுக்கேற்றபடி எவர்க்குந் தீங்கு நேராதவாறு வணிக நன்முறையிற் பெரும் பொருள் தேடித் தொகுத்து, அப்பட்டினத்திலுள்ளா ரெல்லாரினுஞ் சிறந்த செல்வராய்த் திகழ்வாராயினர். ஆகலால் அவர்க்குப் **பட்டினத்துச் செட்டியா**ரென்னுஞ் சிறப்புப் பெயரும் உண்டாக, அது நாடெங்கும் பரம்பிப் பெரிதும் பாராட்டப்படுவ தாயிற்று. இந்த நிலையிற் சிறந்த செல்வ வாழ்க்கையுடையராய் வாழ்ந்த திருவெண்காடருக்கு முப்பதாண்டாகியுங் குழந்தை பிறந்திலது. ஈதொன்றே அவர்க்கு அப்போது குறையெனத் தோன்றினமையால், அக் குறையினையும் நிறைவித்துக்கொள்ளும்பொருட்டுத் திருவிடைமருதூரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் இறை

வினை வேண்டி வழுத்திக் குறையிரப்பாரானார். அறங்கள் பலப்பலவுந் தமது செல்வத்திற்கேற்பச் செய்து வந்தனர்.

இனி, இவர் குறையினை நிறைவிக்கக் கருதிய திருவிடை மருதூர் மருதவாணர் அன்பு அருள் அறவொழுக்கங்களில் வழுவுதலிலராய் உள்ளன்போடு தமக்குக் கோயில் வழிபாடுசெய்யுஞ் **சிவசரும** ரென்னுங் கோயிற் குருக்கள் சிவனடியார்கட்கு நாடோறும் உணவிட்டு மகிழ்பவராதலின், அவ்வாற்றால் அவர் தம் கைப்பொருள்களையெல்லா மிழந்துந் தம் மனைவி மக்களின் ஆடையணிகளையும், மனைவியாரின் திருத்தாலியினையும் விற்று அதனால் வரும் பொருள் கொண்டுஞ் சிவனடியார்க்கு உணவிடுதலை வழாது செய்யும் உறுதியுடையராய் உறைத்து நிற்பக் கண்டு பெரிது மகிழ்ந்து, அவர்க்கும் அவர் கற்பின் மனைவி **சுசீலை**யம்மைக்குங் கனவிற் சென்று, 'திருக்கோயிற் பக்கத்திலுள்ள வில்வ மரத்தடியில் ஒரு குழந்தை யிருக்கும்; அதனை நீவிரெடுத்துக்கொண்டு காவிரிப்பூம் பட்டினஞ் சென்று மகப்பேறில்லாது வருந்திக் கிடக்கும் பெருஞ் செல்வரான திருவெண்காடருக்கும் அவர் மனைவியார் சிவகலையம்மையார்க்குந் தருவீராயின், அவர் உங்கட்கு நிரம்பப் பொருள் தருவார்; அதைக் கொண்டு உங்கள் சிவனடியா ரறத்தினைச் செவ்வையாய்ச் செய்யுங்க' ளென்று அருளி, அங்ஙனமே திருவெண்காடர், சிவகலையென்பார்க்குஞ் 'சிவசருமருஞ் சுசீலையுந் தருங் குழந்தையைப் பெற்றுக்கொண்டு அவர்க்கு நிரம்பப் பொருள் கொடுங்க' ளென்று கனவிலருளி மறைந்தனர். இருதிறத்தாரும் இறைவன் கட்டளைப்படியே செய்து குழந்தையையுஞ் செல்வத்தையும் பெற்றுத் தத்தங் குறை தீர்ந்தனர்.

திருவெண்காடர் திருவருளாற் பெற்ற குழந்தையை அருமை பாராட்டி வளர்த்தலும், அஃதும் வளர்ந்து உரிய காலங்களில் உரிய நலங்களைப் பெற்று **மருதப்பிரா**னென்னுந் திருப்பெயரோடு உலாவி வந்தது. இக்குழந்தை தனது இளந்தைப் பருவத்திற் படகிலேறிக் கடலிற் சென்று விளையாடும்பொழுது

**சிந்துமுனிவர்** ஆணையால் மீனாய்ப் பிறந்திருந்த **மணிபத்திரன்** என்னுங் கந்தருவ னொருவனை அம்மீனை மிதித்துத் தன் உண்மையுருவினை எழச் செய்ததாகக் கூறுப. பின்னர்ப் பதினாறாண்டாயதும் பொருள் தேடி வருவதாகக் கப்பலேறிக் கடல் சென்று, மணிகள் உள்ளழுந்திய எருமுட்டைகளைக் கொண்டு வந்து ஓரருஞ் செயல் நிகழ்த்தியதாகவும் உரைப்ப. இங்ஙனம் மருதப்பிரான் மணிகள் கொண்டுவந்து தந்தையார்பாற் கொடுத்து, உட்சென்று ஒரு சிறு பெட்டியினைத் தாயார்பாற் கொடுத்து, அங்கிருந்தா ரெவர்க்குந் தெரியாமல் திருவிடைமருதூரையடைந்து இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டனர்.

தந்தையார் திருவெண்காடர், தம் புதல்வர் மருதப்பிரானை எங்குந் தேடிக் காணாராய்ப் பின்பு தம் மனைவியை அண்மிக் கேட்க, அவர் தம் கையிற் கொடுத்த சிறு பெட்டியைக் காட்டிச், சிறிது நேரத்திற்கு முன்னால், இதனைக் கொடுத்துவிட்டுச் சென்றதுதான் எனக்குத் தெரியுமென்று கூறினார். திருவெண்காடரும் அச் சிறு பெட்டியைத் திறந்து பார்க்க அதனுள் காதற்ற ஊசி யொன்றும், ஓரோலைச் சுருளு மிருக்கக் கண்டு வியந்து, அவ்வோலைச் சுருளைப் பிரித்துப் படித்துப் பார்த்தார். அதன்கண் 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே' யென்று எழுதப்பட்டிருந்தது. அதனைக் கண்டதும் முன்னை நல்லுணர்வு பெருகி வந்து முன்னிற்றலும், திருவெண்காடர் சிவபிரான் திருவருளால் மலவுணர்ச்சியினை அறவே நீங்கப்பெற்றுச் சிவ வுணர்ச்சி யொன்றே யுடையராய் உள்ளத் துறவின் நின்று தம் பணங்காப்பாளர் **சேந்தனாரை** விளித்து, 'இங்குள்ள செல்வமெல்லாவற்றையும் அறஞ்செய்து விடுக' என்று ஏவித் தம் தாயாரை வணங்கி, 'அம்மா உன் தவம் பெரிது' என்று கூறி மனைவிக்கு வேண்டுவன மொழிந்து உடனே குடும்பத்தை விட்டு நீங்கி ஆடையணிகளேதுமிலராய் ஊர்ப் பொதுமடத்தையடைந்து அவண் சிவனினைவு கூடிப் பேரின்ப நிலையில் அழுந்தியிருந்தார். ' அவர் துறந்த தனித் துறவின் உண்மை நிலை,

'மாடுண்டு கன்றுண்டு மக்களுண்
டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட்
டோமினிக் கேண்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே
யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார்
நமக்குத் துணையு முண்டே

என்பது முதலாக அவர் அப்போது பாடிய பாட்டுக்களினல் தெளியக் கிடக்கின்றது.

அவர் அக்காலங்களிலெல்லாம் பித்தரைப்போல அக் காவிரிப்பூம்பட்டினத்தில் திரிந்துகொண்டிருந்தமையால், அவர் தமக்கையார் அவர் உயர் நிலையினை யறியமாட்டாராய்த் தமக்கு மானக்கேடு வந்ததென் றெண்ணி நஞ்சைக் கலந்து அப்பஞ் சுட்டுத் தருதலும், அவரதனைத் திருவருளா லுணர்ந்து 'தன் வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடு' மென்று கூறித் தமக்கையார் வீட்டுக் கூரைமேலெறிய, அவ்வீடும் பிறவும் எரி யத் தலைப்பட்டனவென்றும், உடனே அதுகண்ட ஊரார் அஞ் சித் திருவெண்காடர்பால் வந்து வணங்கி வேண்டுதலும் அவர் 'தங்களைக் கேட்டுப் பிறந்திலம்' என்றொரு பாடல் பாடித் தீயை அவித்தன ரென்றுங் கூறுப. இங்ஙனமே இன்னும் பல அருஞ்செயல்களைச் செய்துகொண்டு, தமது சமக்கடன் பொருட்டுத் தம் தாயார் வேண்டிக்கொண்டபடி அவ்வூரிலேயே பிள்ளையார் அருகிருக்க, அந்நாளில், தாயாரும் சிவபிரான் திரு வடி நீழ லெய்தினர்கள். அவர்கட்குச் செயற்பாலவான சமக் கடன்களைத் திருவெண்காடர் அன்போடும் உருக்கத்தோடுஞ் செய்து முடித்தனர். அப்போதவர் தாம் முற்றத் துறந்திருந் தும்,

"ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி"

என்று தம் தாய் நன்றி குறித்துக் குழைந்துருகிப் பாடி யிரங்கினமை யெல்லாராலுங் குறிக்கொண்டு கருத்திருத்தற்பாலது.

இனித் தாம் புகாரிலிருந்து முடிக்கவேண்டிய தாய்க் கடமை முடிந்துவிட்டமையால், திருவெண்காடர் திருவிடை மருதூர்க்கு வந்து, 'தெய்வத் தாமரைச் செவ்விதின் மலர்ந்து' என்று தொடங்குந் **திருவிடைமருதூர் மும்மணிக்கோவை** பாடிச் சில நாட்கள் அவ்விடத்திலேயே இருந்தனரென்ப. பின்னர் இறைவன் கட்டளைப்படி தென்னாட்டுத் திருக்கோயில்களையும் பிறவும் வணங்கப் புறப்பட்டுப் பிள்ளையார், சோழநாடு, பாண்டி நாடு, மலைநாடு, கொங்குநாடு, துளுவநாடு, தொண்டநாடு வட நாடுகளெல்லாஞ் சென்று அங்கங்குமுள்ள திருக்கோயில்களை வணங்கி வந்தனர். சோழநாட்டுக்குச் சென்றபோது திருவாரூரிலே நீர்க்கோவை நோய்ப்பட்டு உயிர்துறந்த சிறுவனை உயிர் பெற்றெழும்படி செய்தனர். கொங்குநாட்டிலிருந்தபோது ஒரு நாள் நள்ளிரவில் தமக்குப் பசி மிகுந்தமையால், அருகிருந்த தோர் வீட்டிற் சென்று கைதட்டவே, அவ்வீட்டுக்காரன், அறியாமையினால் அவரைக் கள்வனென்று கருதி வீட்டிற் பிடித்தடைத்துத் துன்புறுத்தினமையும், அஃதறிந்த அண்டை வீட்டுக்காரன் அவரை விலக்கிவிட்டமையும், அன்று முதல் அடிகள்

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
வழைத்தாலும் போகே னரனேயென் றேகம்
இளைத்தாலும் போகே னினி'

என்றோர் உறுதிவைத்துக்கொண்டமையுங் கருதற்பாலன. இனித் துளுவநாடு அடைந்திருந்தபோதும் ஒரருஞ் செயல் நிகழ்ந்தது. அந்நாட்டிற் சென்று அடிகள் **உஞ்சேனைமாகாளம்** அண்மி இறைவனை வணங்கிக்கொண்டு, அவ்வூர்ப்புறத்துக் காட்டிலுள்ள பிள்ளையார் கோவிலி லமர்ந்து சிவநினைவு கூடி அதன்கண் அழுந்தியிருந்தார். அப்போது அவ்வூர் அரசன் வீட்டிற் பலபொருள்கள் களவாடிக்கொண்டு அவ்வழியே சென்ற கள்வர் சிலர், தமது விருப்பம் நிறைவேறினமைக்கு

மகிழ்ந்து, அப்பிள்ளையார்க்கு ஒரு மணிமாலையிடக் கருதி அதனை அவர்மேல் வீசி எறிந்துவிட்டுச் சென்றனர். அஃது அருகே சிவநினைவு கூடியிருந்த அடிகள் கழுத்தில் விழுந்தது. திருடரைத் தேடி வந்த காவலாளர்கள் திருவெண்காடரைக் கண்டு அவரே திருடனென் றெண்ணிப் பிடித்து வலிந்திழுத்துக் கொண்டு போய் அரசனுக்கறிவிக்க, அவனும் அவரை ஆராயாமற் கழுவிலேற்றும்படி ஆணையிட்டனன். அடிகளுங் கழுமரத்தின் அருகு சென்று,

என்செய லாவதி யாதொன்று
மில்லை யினித்தெய்வமே
யுன்செய லேயென் றுணரப்பெற்
றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று
மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங
னேவந்து மூண்டதுவே.

என்று இறைவனை வேண்டிப் பாடுதலும், அக்கழுமரந் தீப்பற்றி யெரிந்து சாம்பராயிற்று. உடனே அரசன் அறிந்து அஞ்சி அடிக்கட்கு அடிமை பூண்டான். அடிகளும் அவனைத் திருவிடைமருதூர்க்குச் செல்லுமாறு ஆணையிட்டு வடநாடு சென்றனர். அவ்வரசனே **பத்திரகிரியா** ரென்ப. பத்திரகிரியார் திருவிடை மருதூர்க்குச் சென்று அடிகண்மாட்டும் இறைவன் மாட்டும் பேரா அன்பு பூண்டு சில நாள் ஒழுகி வந்தனர்.

வடநாடு சென்ற அடிகள் திரும்பத் திருக்குற்றாலமடைந்து திருவிடைமருதூ ரண்மிப் பத்திரகிரியார்க்கு வீடுபேறளித்துத் திருவெண்காடெய்தி, தன் பொருள்களையெடுத்து அறஞ்செய்தமையால் அரசனாற் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையிருந்த சேந்தனாரைத் திருப்பாடலருளித் தளையினின்றும் விடுவித்தனர். அதன்பின்பு சீகாழியடைந்து **திருக்கழுமல மும்மணிக்கோவை**யும், தில்லை சேர்ந்து **கோயினான்மணிமாலையும்** இவர் பாடினரென்றுங் கூறுப. அடிகள் திருவருளை வணங்கித் திருக்

காஞ்சி போந்து **கச்சித்திருவந்தாதி, திருவேகம்பமாலை, கச்சித் திருவகவல்** முதலியன பாடி இறைவனை வணங்கித் திருக்கழுக் குன்றம், திருவாலங்காடு, திருக்காளத்தியெல்லாமுந் தொழுது பாடல்களருளி, இறைவன் திருவிடை மருதூரில் தமக்குத் தந்த ஆணைப்படி திருவொற்றியூரடைந்து **திருவொற்றியூர்த் தொகை** முதலிய அருட்பாடல்கள் பலவும் அருளிச் செய்து கொண்டு அவணிருந்தனர்.

சிலநாள் கழித்து இறைவன் திருவருள் முழுதுந் தமக் குக் கைவரப்பெறுதலும் **முதல்வன் முறையீடு ; அருட்புலம்பல்** முதலியன பாடிப் பட்டினத்துப் பிள்ளையார் ஒற்றியூரின் ஊர்ப் புறத்தே மாடு மேய்க்குஞ் சிறுவர்களோடு வழக்கப்படி விளை யாடுவதுபோல விளையாடி, அருகிருந்ததொரு குழியிலமர்ந்து தம்மை மணலுஞ் செடிகொடிகளுங்கொண்டு மூடச்செய்து இறைவனோடு இரண்டறக் கலந்து அவண் சிவலிங்க உருவாய் விளங்கப் பெற்றனர். அன்று முதலாகத் திருவொற்றியூர்க்குச் செல்வாரெல்லாரும் பட்டினத்தடிகளின் சிவலிங்கவுருக் கண்டு வணங்கி மகிழும் பெறலரும் பேறு பெற்றிருக்கின்றாரென்பது.

சென்னை,
10—8—1928

இளவழகனார்.

உ

# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

## க. கோயில் நான்மணிமாலை*

### வெண்பா

பூமேல் அயன்அறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. க

### கட்டளைக் கலித்துறை

குடைகொண்டிவ் வையமெ லாங்குளிர்
வித்தெரி பொற்றிகிரிப்
படைகொண் டிகல்தெறும் பார்த்திவ
ராவதிற் பைம்பொற்கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை அம்பலத்
தான்தொண்டர்க் கேவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. உ

### ஆசிரிய விருத்தம்

களிவந் தமுதூறிக் கல்மனத்தை எல்லாங்
கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
விரிசடையும் வெண்ணீறுஞ் செவ்வானம் என்ன
ஒளிவந்த பொன்னிறமுந் தொல்நடமுங் காட்டும்
உடையான் உயர்தில்லை அம்பலமொன் றல்லால்
எளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
டிடைமிடைந்த புன்மொழியால் இச்சையுரை யோமே. ங

### ஆசிரியப்பா

உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையுங் கடந்து

* நான்மணிமாலை : வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா ஆகிய நான்கும் முறையே விரவிவரும் மாலை.

தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினுந் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாண நீடு
குன்றக் கோமான் றன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்
தழங்குந் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையுஞ்
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியும்என்று
ஒருபதி னாயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர் முன்புகுந் தறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்
தென்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பிற் காவிறை அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டுங்
கானில்வால் நுளம்புங் கருடனை தலினே. ௪

ஆதரிக்க மாலும் அறிந்திலனென் றஞ்சுதறிந்தே
காதலிக்க நாயேற்குங் காட்டுமே—போதகத்தோல்
கம்பலத்தான் நீள்நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி. ௫

அடியொன்று பாதலம் ஏழிற்கும் அப்புறம் பட்டதிப்பால்
முடியொன்றிவ் வண்டங்கள் எல்லாங் கடந்தது முற்றும்வெள்ளைப்

பொடியொன்று தோளெட்டுத் திக்கின் புறத்தன பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத் தான்றன் திருநடமே. ௬

நடமாடி ஏழுலகும் உய்யக் கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடுந்
திடமாட மதில்தில்லைக் கோயில் கொண்ட
செல்வரே உமதருமை தேரா விட்டீர்
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடன்நிற்க இயல்வ தன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சண்டா யம்கருதி நஞ்சுண் டீரே. ௭

நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணந்
தன்முதன் முருக்க நென்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கி யான்முன்
கருவிடை வந்த வொருநாள் தொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்தாங்
கருள்நனி யின்றி யொருவயி றோம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனன் இருந்தும் போலும் பெயர்த்துநின்
றெண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே. ௮

இலவிதழ்வாய் வீழ்வார் இகழ்வார் அவர்தங்
கலவி கடைக்கணித்துங் காணேன்—இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார் நின்றாடும்
நாடகங்கண் டின்பான நான். ௯

தானே பிறந்த பயன்படைத் தேன்அயன் நாரணன்எங்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென் தீமைஎல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே. ௧௦

**[தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்]**

சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தஞ்சொல் நலிய மெலிந்து கிளியொடு
பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து நிறையொடு
பண்பு தவிர அனங்க னயவொடு
நண்பு பெருக விளைந்த வினையன
நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயல்கள்
நைந்து நரல அலைந்த பகிரதி
அந்தி மதியொ டணிந்து தி(ல்)லைநகர்
அம்பொன் அணியும் அரங்கில் நடநவில்
அங்கண் அரசை யடைந்து தொழுதிவள்
அன்று முதலெதிர் இன்று வரையுமே. கக

வரையொன்று நிறுவி அரவொன்று பிணித்துக்
கடல்தட வாக மிடலொடும் வாங்கித்
திண்டோள் ஆண்ட தண்டா அமரர்க்
கமிர்துணை அளித்த முதுபெருங் கடவுள்
கடையுகஞ் சென்ற காலத்து நெடுநிலம்
ஆழிப் பரப்பில் ஆழ்வது பொருஆ
தஞ்சேல் என்று செஞ்சே லாகித்தன்
தெய்வ உதரத்துச் சிறுசெலுப் புரையிற்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோ
டுலகு குழையத் தொருநாள் உண்டதும்
உலக மூன்றும் அளந்துழி ஆங்கவன்
ஈரடி நிரம்பிற்று மிலவே தேரில்
உரைப்போர்க் கல்ல தவன்குறை வின்றே
இனைய னாகிய தனிமுதல் வானவன்

கேழல் திருவுரு வாகி யாழத்
தடுக்கிய எழும் எடுத்தனன் எடுத்தெடுத்
தாழி யூழி கீழுறக் கிளைந்துங்
காண்பதற் கரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய
பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
காண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவின் மறுவின்றி விளங்கி
எவரும் காண ஆடுதி அதுவெனக்
கதிசயம் விளைக்கும் அன்றே அதிசயம்
விளையாது மொழிந்த தெந்தை விளையாது
கல்லினும் வலிதது நல்லிதிற் செல்லாது
தான்சிறி தாயினும் உள்ளிடை நிரம்ப
வான்பொய் அச்ச மாயா வாசை
மிடைந்தன கிடப்ப இடம்பெறல் அருமையில்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு சுழற்ற
ஆடுபு கிடந்த பீடில் நெஞ்சத்து
நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையுஞ்
செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமுந் தடுத்தசெங் கையும்
புள்ளி யாடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி நம்ப கூடும்
வேத நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திற மாதலின் மொழிவது
பெரியதிற் பெரியை யென்றும் அன்றே
சிறியதிற் சிறியை யென்றும் அன்றே
நிறைபொருள் மறைகள் நான்குநின் அறைகழல்
இரண்டொடும் அறிவினில் ஆர்த்து வைத்த
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே. கஉ

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்
துழவரும்போய் ஓயுமா கண்டோம்—மொழிதெரிய
வாயினால் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனா ரென்றுரைப்போம் நாம். ௧௩

நாமத்தி னால்என்றன் நாத்திருத் தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னால்உன் சரண்பணி யேன்சார்வ தென்கொல்நான்
வாமத்தி லேயொரு மானைத் தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னால்உன் திருத்தில்லை சேர்வதோர் செந்நெறியே. ௧௪

நெறிதரு குழலை யறலென்பர்கள்
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்
அறிகுவ தரிதிவ் விடையென்பர்கள்
அடியிணை கமல மலரென்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர் அமையும் அவரென்செய
மறிமழு வுடைய கரனென்கிலர்
மறலியை முனியும் அரனென்கிலர்
மதிபொதி சடில தரனென்கிலர்
மலைமகள் மருவு புயனென்கிலர்
செறிபொழில் நிலவு தி (ல்)லையென்கிலர்
திருநடம் நவிலும் இறையென்கிலர்
சிவகதி யருளும் அரசென்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே. ௧௫

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யுங்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனுந்
தொல்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோண்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்குந்

துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலங்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாணநின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே. ௧௬

[வேறுபாடுகண்டு வினைய செவிலிக்குத் தோழி கூறியது.]

செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கென்
தையல் வளைகொடுத்தல் சாலுமே—ஐயன்தேர்
சேயே வருமளவிற் சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையிற் சங்கு ௧௭

[கொன்றைமாலையை விரும்பியதலைவிக்குத் தோழி கூறியது.]

சங்கிடத் தான்இடத் தான்தன தாகச் சலமேந்தொருத்தி
அங்கிடத் தான்தில்லை அம்பலக் கூத்தற் கவிர்சடைமேல்
கொங்கிடத் தார்மலர்க் கொன்றையென் றுயெங்கை நீயும்ஒரு
பங்கிடத்தான் வல்லையேல் இல்லையேல்உன் பசப்பொழியே. ௧௮

[தலைவி தலைவன் வாராமை குறித்து வருந்திக் கூறியது.]

ஒழிந்த தெங்கள்உற வென்கோலோ எரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னொர்நாள்
விழுந்தெ ரிந்துதுக ளாக வென்றிசெய்த
வில்லி தில்லைநகர் போலியார்
சுழிந்த வுந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநொந்
தழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமொர்
சிந்தை யாயொழிவ தல்லவே. ௧௯

அல்லல் வாழ்க்கை வல்லிதிற் செலுத்தற்குக்
கைத்தேர் உழந்து கார்வரும் என்று
வித்து விதைத்தும் விண்பார்த் திருந்துங்
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டு
முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்
அருளா வயவ ரம்பிடை நடந்தும்
இருளுறு பவ்வத் தெந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியும்
ஆற்றல் வேந்தற்குச் சோற்றுக் கடன்பூண்டுந்
தாளுழந் தோடியும் வாளுழந் துண்டும்
அறியா வொருவனைச் செறிவந்து தெருட்டியுஞ்
சொற்பல புனைந்துங் கற்றன கழறியுங்
குடும்பப் பாசம் நெடுந்தொடர்ப் பூட்டி
ஐவர் ஐந்திடத் தீர்ப்ப நொய்திற்
பிறந்தாங் கிறந்தும் இறந்தாங்கு பிறந்துங்
கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்குங்
கொப்புட் செய்கை ஒப்பின் மின்போல்
உலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்யெரி வளர்த்துப் பெய்முகில் பெயல்தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றுங்
கடவுட் கண்ணுதல் நடமுயன் றெடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டும்
மீதியாத் தசைத்த வெள்ளெயிற் றரவுஞ்
சேயுயர் அகலத் தாயிரங் குடுமி
மணிகிடந் திமைக்கும் ஒருபே ராரமும்
அருள்பொதிந் தலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமுங்
கங்கை வழங்குந் திங்கள் வேணியுங்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை யழுத்தியாங்
குள்மகிழ்ந் துரைக்க வுறுதவஞ் செய்தனன்

நான்முகன் பதத்தின் மேல்திகழ் பதந்தான்
உறுதற் கரியதும் உண்டோ
பெறுதற் கரியதோர் பேறுபெற் றேற்கே. ௨௰

பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
சுற்றோட வோடித் தொழாநிற்கும்—ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்றேர்போங்
கோமறுகிற் பேதைக் குழாம். ௨௧

[கூதிர் கண்டு நற்றாய் இரங்கிக் கூறியது.]

பேதையெங் கேயினித் தேறியும் வாள்பிர மன்றனக்குத்
தாதைதன் தாதையென் றேத்தும் பிரான்றண் புலிசைப்பிரான்
கோதையந் தாமத்தண் கொன்றைகொடானின்றுகொல்லைவெண்ணி
ஊதையுங் காருந் துளியொடுங் கூடி உலாவியவே. ௨௨

[தலைமகன் தலைமகளது உறுப்புக்களின் நன்மையைப்
புனைந்து கூறியது.]

உலவு சலதி வாழ்விடம் அமரர் தொழவு ணவென
நுகரு மொருவ ரூழியின் இறுதி யொருவ ராழிய
புலவு கமழ்க ரோடிகை யடைய புனிதர் பூசுரர்
புலிசை யலர்செய் போதனி பொழிலின் நிழலின் வாழ்வதோர்
கலவ மயில னார்சுருள் கரிய குழலி னார்குயில்
கருது மொழியி னார்கடை நெடிய விழியி னாரிதழ்
இலவில் அழகி யாரிடை கொடியின் வடிவி னார்வடி
வெழுது மருமை யாரென திதய முழுதும் ஆள்வரே. ௨௩

ஆளெனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத் தவையெஞ் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாள்தொறும் பழகிக்
கனவிலும் நவிற்றுங் காதலேம் வினைகெடக்
கேட்பதும் நின்பெருங் கீர்த்தி மீட்பதும்
நின்னெறி யல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென

வருத்தி செய்திடுவ துருத்திர சாதனம்
காலையும் மாலையுங் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினிற்
கைகொடு குயிற்றுவ தைய நின்னது
கோயிற் பல்பணி குறித்தே ஓயா
துருகி நின்னினைந் தருவி சோரக்
கண்ணிற் காண்பதெவ் வுலகினுங் காண்பனவெல்லாம்
நீயே யாகி நின்றதோர் நிலையே நாயேன்
தலைகொடு சார்வதுன் சரண்வழி யல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனால்
பொய்த்தவ வேடர் கைத்தகப் படுத்தற்கு
வஞ்சச் சொல்லின் வார்வலை போக்கிச்
சமயப் படுகுழி சமைத்தாங் கமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆறு விரதத் தகப்படுத் தாழ்த்து
வளைவுணர் வெனக்கு வருமோ வுளர்தரும்
நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி யிருங்கடல் அடங்குந்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கும்நீ
ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்
நான்மறை யாளர் நடுவுள்புக் கடங்கிச்
செம்பொற் றில்லை மூதூர்
அம்பலத் தாடும் உம்பர்நா யகனே. உ௪

நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய னையருளுந் தம்பிரான்—தூயவிரை
மென்துழாய் மாலோ டயன்தேட வியன்தில்லை
மன்றுளே யாடும் மணி. உ௫

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம் வேர்ப்பஅம் மன்றுக்கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும் பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போநெஞ்ச மேஇனிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதியெல் லோரும் பிணமென்னவே. உசு

[தலைவி கார்காலங் கண்டு தோழியிடம் வருந்திக் கூறியது.]

என்றும் இனிமட வரலாய் செய்குவ
தினமாய் வண்டுகள் பலர்கிண்டித்
தென்றொ வெனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி யணிதாமந்
தன்றால் அல்லது தீரா தென்னிடர்
தகையா துயிர்கரு முகிலேறி
மின்றொ நின்றது துனிவா டையும்வா
வீசா நின்றது பேசாயே. உஎ

பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்
நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன் றொருவழி நில்லா அன்றியுஞ்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறன் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையர்எங் குலத்தினர் இறந்தோர் அனையவர்
பெரு நின்றில போலுந் தெரின்
நீயும் அஃதறிதி யன்றே மாயப்
பேய்த்தேர் போன்று நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்று நனவு பெயர்பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்

தன்மையர் இழிவு சார்ந்தனை நீயும்
நன்மையில் திரிந்த புன்மையை யாதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்
ஆசையாம் பரிசத் தியானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறவு துணராச் செறுவுழிச் சேர்ந்தனை
நுண்ணூல் நூற்றுத் தன்கைப் படுக்கும்
அறிவில் கீடத்து நுந்துழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்
டிடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றென இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்
கருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்று ளாடும்
இறையவன் என்கிலை என்னினைந் தனையே. உ௮

நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ—அனைவீரும்
மெச்சியே காண வியன்றில்லை யானருளென்
பிச்சியே நாளைப் பெறும். உ௯

பெறுகின்ற எண்ணிலி தாயரும் பேறும் யானும்என்னை
உறுகின்ற துன்பங்க ளாயிர கோடியும் ஒய்வொடுஞ்சென்
றிறுகின்ற நாள்களு மாகிக் கிடந்த இடுக்கண்எல்லாம்
அறுகின் றனஇல்லை ஆருடை யான்செம்பொன் அம்பலத்தே. ௩௰

[தலைவி தன்குறையைத் தலைவனிடம் உணர்த்துமாறு தோழிக்குக் கூறியது.]

அம்பலவர் அங்கணர் அடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்றும்மெதன் ஆனையை உரித்துக்

கம்பலம் உவந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய காதலறி யாதே
வம்பலர் நிறைந்துவசை பேசவொரு மாடே
வாடையுயி ரீரமணி மாமையும் இழந்தென்
கொம்பல மருந்தகைமை கண்டுதக வின்றிக்
கொன்றையரு ளீர்கொடியிர் என்றருளு வீரே. ௩௧

அருளு வாழி அருளு வாழி
புரிசடைக் கடவுள் அருளு வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே இளமை நீக்கம்
அதனினுங் கடிதே மூப்பின் தொடர்ச்சி
வாணாள் பருகி யுடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றம்
இனைய தன்மைய திதுவே இதனை
எனதெனக் கருதி இதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே யவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
ஒன்றினும் படாதன சிலவே என்றிவை
கணத்திடை நினைந்து களிப்பவுங் கலுழ்பவுங்
கணக்கில் கோடித் தொகுதி யனைத்தாம்
ஒன்றொன் றுணர்வுழி வருமோ அனைத்தும்
ஒன்றா வுணர்வுழி வருமோவென் றொன்று
தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய
மனத்தின் செய்கை மற்றிதுவே நீயே
அரியை சாலவும் பெரும தெரிவுறில்
உண்டாய்த் தோன்றா யாவையும் நீயே
கண்டனை யவைநினைக் காணா அதுதான்
நின்வயின் மறைத்தோ யல்லை யுன்னை
மாயாய் மன்னினை நீயே வாழி

மன்னியுஞ் சிறுமையிற் கரந்தோ யல்லை
பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே
பெருகியுஞ் சேணிடை நின்றோ யல்லை
தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே
நண்ணியும் இடையொன்றின் மறைந்தோ யல்லை
இடையிட்டு நின்னை மறைப்பது மில்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே, அஃதான்று
நினைப்பருங் காட்சி நின்நிலை யிதுவே
நினைப்புறுங் காட்சி என்நிலை யதுவே
இனிநனி யிரப்பதொன் றுடையன் மனம்மருண்டு
புன்மையில் நினைத்துப் புலன்வழி படரினும்
நின்வயின் நினைந்தே னாகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுதல் அனைத்தொன்று
நீயே யருளல் வேண்டும் வெய்முதிர்
கயிலை புல்லென எறிவிசும்பு வறிதாக
இம்பர் உய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதியா னவனே. ௩௨

வானோர் பணிய மணியா சனத்திருக்கும்
ஆனாத செல்வத் தரசன்றே—மானகம்
பந்திப்பார் நின்றாடும் பைம்பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு. ௩௩

வாழ்வா கவுந்தங்கள் வைப்பா கவும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை யம்பலத் தாயுன்னை யன்றியொன்றைத்
தாழ்வார் அறியாச் சடிலநஞ் சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றோதெய்வ மாக வணங்குவதே. ௩௪

[தோழி தலைவியது வேறுபாடுகண்டு வெறியாடுதலைக்கொண்ட
தாயர்க்கு அதனை விலக்கிக் கூறியது.]

வணங்குமிடை யீர்வறிது வல்லியிடை யாள்மேல்
‘மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோன்

துணங்கியிவள் தானுமெலி யப்பெறும் இடர்க்கே
ஊதையெரி தூவியுல வப்பெறு மடுத்தே
பிணங்கியரா வோடுசடை யாடநட மாடும்
பித்தரென வும்இதயம் இத்தனையும் ஓரீர்
அணங்குவெறி யாடுமறி யாடுமது வீரு
மையலையும் அல்லலையும் அல்லதறி யீரே. ௩௫

ஈரவே ரித்தார் வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீ தசைய
வண்டியங்கு வரைப்பின் எண்டோள் செல்வ
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற் பட்ட மேனி எந்தை
ஒல்லொலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத் தொருபெருங் கடவுள்
வானவர் வணங்குந் தாதை யானே
மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்
தேனியங் கொருசிறைக் கானகத் தியற்றிய
தெய்வ மண்டபத் தைவகை யமளிச்
சிங்கஞ் சுமப்ப வேறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கத்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்
ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதுமெனத்
தெறுசொ லாளர் உறுசினந் திருகி
எற்றியும் ஈர்த்துங் குற்றங் கொளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்
வார்ந்துங் குறைத்தும் மதநாய்க் கீந்துஞ்
செக்குரற் பெய்துந் தீநீர் வாக்கியும்
புழுக்குடை யழுவத் தழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் காலம் அழுத்தி யின்னா
வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்
நிரயஞ் சேரினுஞ் சேர்க வுரையிடை

ஏனோ ரென்னை யாளுது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையா
இன்பத் தழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினுந் துதைக முன்பில்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகா
தென்றும் இருக்கினும் இருக்க அன்றி
இன்றே இறக்கினும் இறக்க ஒன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்டகைக் குரிசில்நின் அடியரொடுங் குழுமித்
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே. கசு

[தலைவி தலைவன்பாலுள்ள பொருள் ஒன்றனைக் கண்டு
தனது விருப்பத்தைக் கூறியது.

ஆனேறே போர்தால் அழிவுண்டே அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே—வானோங்கு
வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு. கஎ

கொண்டல்வண் ணத்தவன் நான்முகன் இந்திரன் கோமகுடத்
தண்டர்பின் னடித்தொழும் அம்பலக் கூத்தனுக் கன்புசெய்யா
மிண்டர்பின் னடித்திரி வாரெனக் கென்னினி நானவன்றன்
தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கி
னனே. கஅ

தொடர நரைத்தங்க முன்புள வாயினை
தொழில்கண் மறுத்தொன்று மொன்றி யிடாதொரு
சுளிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிந்தனை யோய்வொடு
நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொருவொரு
நடலை நமக்கென்று வந்தன பேசிட

நலியிரு மற்கஞ்சி யுண்டி வெறுவிழு
நரக வுடற்கன்பு கொண்டலை வேன்இனி
மிடலொடி யப்பண் டிலங்கையர் கோனொரு
விரலின் அழுக்குண்டு பண்பல பாடிய
விரகு செவிக்கொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்றி யிடாவகை
திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர் ஊறிய
தெளியமு தத்தின் கொழுஞ்சுவை நீடிய
தில்லைநக ரில்செம்பொன் அம்பலம் மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்சது ராவதே. ரு.கூ

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர் கோனுக்கு
மாநிதி இரண்டும் ஆளப் பொருவளத்து
அளகை யொன்றுந் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாள்முறை பிறழாது கோள்முறை வலித்துப்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி
குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்றி விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒருநொடி பொடிபட
வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளிக் கைமுயன்று கிழித்தெனக்
கரியோன் றுரித்த பெருவிறல் போற்றி
பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி

விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை யெடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரன் தடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி
வெண்ணெ யண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நூந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை யழல்வாய்ப் புகைவிழி யொருதனிச்
சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற்று எழ்வலி மணியகு பகுவாய்
உரகம் பூண்ட வொப்பனை போற்றி
கங்கையுங் கடுக்கையுங் கலந்துழி ஒருபால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி
கடவுள் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் னேறு போற்றி
ஏக வெற்பன் மகிழு மகட்கிடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுள்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்து
ஆடு நாடகம் போற்றி யென்றாங்கு
என்றும் போற்றினும் என்றனக் கிறைவ
ஆற்றல் இல்லை யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே. ௫௦

---

# உ. திருக்கழுமல மும்மணிக்கோவை*

## ஆசிரியப்பா

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல வொருகூறு
இமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை யிருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்டொறுங் காண்டொறும்
முதிரா இளமுலை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதல் தெய்வச் சிறுபிறை
இளநிலாக் காண்டொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதஞ் செவ்வி செய்யநின்
செங்கைக் கமல மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த
மலைமகள் தனாது நயனக் குவளைநின்
பொலிவினொடு மலர மறையோர்
கழுமல நெறி நின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை யுலகங் கீழ்முதல் தாழ்ந்திங்கு
ஒன்றா வந்த குன்றா வெள்ளத்து
உலகமூன் றக்குங் களைக ணாகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் நின்று

* மும்மணிக்கோவை; ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவை முறையே விரவிவரும் கோவை.

ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை யவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோஒ டுடைய செவியன் என்றும்
பீஇ டுடைய பெம்மான் என்றுங்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே. க

## வெண்பா

அருளின் கடல்அடியேன் அன்பென்னு மாறு
பொருளின் திரள்புகலி நாதன்—இருள்புகுதும்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்க்கு
அண்டத்தார் தாமார் அதற்கு. உ

## கட்டளைக் கலித்துறை

ஆரண நான்கிற்கும் அப்பாலவன் அறியத் துணிந்த
நாரணன் நான்முக னுக்கரி யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப் பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங் கடந்த கருப்பொருளே. ௩

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போககிப் பொருதிறல்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்து
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
ஞானத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி(சு)

எந்தைநீ யிருக்க விட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து
நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே. ௪

மானும் மழுவுந் திருமிடற்றில் வாழும்இருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. ௫

ஒளிவந்த வாபொய் மனத்திருள் நீங்கஎன் னுள்ளவெள்ளந்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தியாதவொரு
களிவந்த வாஅன்பு கைவந்த வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல வாணர்தம் இன்னருளே. ௬

அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத் தாடகக் குடுமி
மழைவயிறு கிழிக்குங் கழுமல வாணநின்
வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவை யுடன்இருந்த பரம யோகி
யானென் றுணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்

நிலமுந் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்(து)
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியுந் தந்தைய ராகியும்
வந்தி லாதவர் இல்லை யான்அவர்
தந்தைய ராகியுந் தாய ராகியும்
வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை, யான்அவை
தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை, அனைத்தே
காலமுஞ் சென்றது யான்இதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலுந்
தந்திரம பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே யாயினும்
இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற் படாவகை காத்தல்நின் கடனே. எ

கடலான காமத்தே கால்தாழ்வர் துன்பம்
அடலாம் உபாயம் அறியார்—உடலாம்
முழுமலத்தை ஓர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். அ

[தோழி அறத்தொடு நிற்றல்]

தொழுவாள் இவள்வலை தோற்பாள் இவளிடர்க் கேயலர்கொண்டு
எழுவாள் எழுகின்ற தென்செய வோஎன் மனத்திருந்தும்
கழுவா மணியைக் கழுமல வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக்கண்டு வாழ்வதென் றோஎன் வசையில்லையே. க

புவனியில் காட்சி இசைதனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து

வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பில் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக
அமைநாண் மென்தோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியிற் சிறந்த வொற்றை நாட்டத்துக்
காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே
கல்லா உளத்திற் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுந்தண் நாட்டத்துக்
காண்டொறுங் காண்டொறும் எல்லா மியாண்டை
யாயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வது மாகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனப்பல வாகி
இல்லன வுளவா யுள்ளன காணாப்
பன்னாள் இருள்வயிற் பட்டேன் அன்னதும்
அன்ன தாதலின் அடுக்கும தென்னெனிற்
கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி
ஒழிவின் றொன்றின் ஒன்று தடுமாற
வந்தாற் போல வந்த தெந்தைநின்
திருவருள் நாட்டங் கருணையிற் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே. ௪௦

எனவே யெழுந்திருந்தாள் என்செய்வா ளின்னம்
சினவேறு காட்டுதிரே யென்னும் இனவேகப்
பாம்புகலி யாகிமிரும் பன்னுச் சடைமுடிநம்
பூம்புகலி யானிதழிப் போது. ௧௧

போதும் பெறாவிடில் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண் டின்றே யிணையாகச்செப்பும்
சூதும் பெறுமுலைப் பங்கர்தென் தோணி புரேசர் வண்டின்
தாதும் பெறாத அடித்தாமரை சென்று சார்வதற்கே. ௧௨

சார்ந்தவர்ப் புரக்கு மீர்ஞ்சடைப் பெரும்
கருணை முதுவெள்ளம் பெருகு திருநயந
கைவல நெல்லியங் கனியது போலச்
சைவசித் தாந்தத் தெய்வவா கமத்தை
வரன்முறை பகர்ந்த திருமலர் வாய
பவளவரை மீதில் தவளமின் னென்னச்
செப்பரு மார்பணி முப்புரி நூல
பேரிக லாணவக் காரிரு ளினுக்கும்
மின்றொடர் வல்வினை வன்றொட ரினுக்கும்
மாயைமா மாயை யாயபே யினுக்கும்
அஞ்சலென் றமைத்த கஞ்சமென் கரதல
அருமறைச் சிரத்தும் பெருமைமெய் யன்பர்
துங்கஇத யத்துந் தங்குபொற் பாத
துன்னிய பயோதர மின்னின மிடைதலின்
அளப்பரும் பெருமை வளத்தினை விளைத்தலின்
சந்திர திலகஞ் சிந்துர மருவலின்
உறுகண் டிரவந் துறுமுழை யுறுதலின்
சாதமுறை சுழீஇச் சோதிமீ தமர்தலின்
பணையெழு மரவம் பிணையொடு மேவலின்
காமரஞ் செவ்வழி காமரி னெய்தலின்
அலைகை யெதிரென் றுமாசையுற் றுறைதலின்

ஆடக மருவி நீடறை பெறுதலின்
காட்டியத் தோகை யீட்டமங் கணைதலின்
அகத்தியன் மன்னும் மகத்துவஞ் சிவணலின்
மலையா சலமென நிலைசேர் மாடம்
மாளிகை சூழ்ந்த சூளிகைப் புரிசை
நேமிமால் வரையெனப் பூமிமீ திலங்கும்
காழிமா நகரத் தாழிதோ றமர்ந்த
அமையா வன்பி னுமையாள் கொழுந

தெரியநான் முகன்பணி பெரியநா யகநின்
பொன்மலர்ப் பாதஞ் சென்னிவைத் திறைஞ்சுதும்
மேற்படு மிதயப் பாற்கடல் நடுவுள்
பரம்பரை தவறா வரம்பெறு குரவன்
மருளற இரங்கி யருளிய குறியெனும்

நிந்தையில் கனக மந்தரம் நிறுவி
மாணறி வென்னுந் தாணிடைப் பிணித்த
நேச மென்னும் வாசுகி கொளுவி
மதித்த லென்னு மதித்தலை யுளுற்றிய
பேரா இன்பச் சீரா னந்தப்

பெறலரு மமுதந் திறனொடும் பெற்று
ஞானவாய் கொண்டு மோனமா யுண்டு
பிறப்பிறப் பென்னு மறப்பெரும் பயத்தால்
பன்னாள் பட்ட வின்னலுங் ககற்றி
என்னையுந் தன்னையு மறந்திட்டு
இன்ப மேலீ டெய்துதற் பொருட்டே. கரு

பொருளாசை பெண்ணாசை பூவாசை யென்னும்
மருளாசை யாமாசை மாற்றித்—தெருள்ஞான
வேந்தராய் வாழலா மெய்யன்பால் நன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று. கசு

[தலைவனைப் பிரிந்த தலைவி கார்காலம் முதலியன கண்டு வருந்திக் கூறியது]

போற்றும் பழமறை வாசிப் புனிதர் புகலிவெற்பன்
ஆற்றுந் தவத்தினைக் கண்டேநகைத்த தணிகொள்முல்லை
ஊற்றும் புயல்வட காற்றோ வடிக்கத் தொடங்குமதிக்
ஈற்றிங் கெனது மனங்குழம் பாகக் கிடைத்ததின்றே. கசு

இன்றென உளதென அன்றென ஆமென,
உரைதரு நூலையும் பொருளையுந் தனித்தனி
பல்வித மாகச் சொல்வகைச் சமயம்
ஆகிய பயம்பிற் போகுதல் குறித்த
நிலையில் துறைபல நிலையுள துறைசில
பொருந்திடு முலகப் பெருங்கட லிடத்தின்
மயிர்நூல் கிடத்திப் பயில்வுறு தோலெனும்
வன்புறு பலகையி னன்பெனு மாணியில்
நரம்பெனப் பெரிய உரம்பெறு கயிற்றின்
வெரிநுறு மென்பெனும் பரிய கூம்பில்
ஐம்பொறி யாகிய மொய்ம்புறு வாய்தலில்
காயமென வமைத்த மாயநா வாயில்
இருவினை யென்ன வருசரக் கேற்றிக்
காமமு லோப மேமமா மோகம்
இதமுறு குரோத மதமாற் சரியமென்று
உரைபெறு பவனர் நிறையுற இருத்தி
நெடுநீ ரென்னப் படுநெடு நாணில்
தங்கிய மடியெனு நங்கூரஞ் சேர்த்தி
யற்றமில் மனமெனப் பெற்றபாய் விரித்துத்
தடைபடா வாசைக் கடுவளி தூரப்பத்
தான மாகி யானதீ வுகளில்
செல்வழிச் சென்று புல்வழிப் புல்லி
இவ்வா றியங்கு மவ்வா றதனுள்
முன்பார் கால வன்பார் தாக்கத்
தொக்குறு மரக்கலம் பக்குவிட் டம்ம

அக்கடல் நீருட் புக்கறி வழியுழி
மறலி யென்னுஞ் சுறவுபிடித் தீர்ப்பக்
கடுநர கென்னும் படுகுழி யழுந்தி
உளைதுய ரினுக்கோ ரளவிலை யதனால்
இம்முறை யியங்குதல் செம்மையன் றென்று
முற்றுணர் பெரியோ யற்றமில் வலியோய்
ஓதா துணர்ந்த நாதா நீத
அருவுரு வென்னும் பொருண்முழு துடையோய்
யாவரும் நின்வய மேவரப் புரிவோய்
கரையுறு மின்பப் புரைதவிர் நிமல
சாந்தணி வனமுலை யேந்திழை பாக
ஞானமா மணநிறை மோனமா மலரே
வித்தகம் பழுத்த முத்திவான் கனியே
பரைமுத லைம்பணை நிறைபெறக் கிளைத்த
திருத்தகு நீழ லருட்பெருந் தருவே
பத்திகொள் நித்தில மொத்துற நிரைத்த
பசும்பொனில் செய்த தசும்புபல தொக்க
தோற்றம் போல வீற்றுவீற் றமைந்த
தீங்கனி பணைதொறுந் தாங்குமா தளையும்
வித்துரு மத்தினை யொத்தசெந் தளிரும்
ஒளிவயி டூரியக் குளிர்மது மலரும்
மேவிடு வண்டெனு நீலமா மணியும்
மரகத மென்ன விரவுகாய்த் திரளும்
மறுவின்மா மணியெனும் நறியசெங் கனியும்
கிடைத்தசீர் வணிகரிற் படைத்தமாந் தருவும்
எண்டிசை சூழ்ந்து விண்டொடும் புகலி
மேவிய பெரும ஆவிநா யகனே
கணபணக் கச்சைப் பணவர வசைத்த
மட்டலர் புழுகணி சட்டை நாயகன்
என்னுமீ காமன் மன்னினன் புரப்பநீ
வீற்றினி திருக்க வேற்றமெய்ப் பிரணவத்
தோணியே பற்றெனத் துணிந்து
காணுறு மறிவொடு கண்டுகொண் டேனே. கக

## [தோழி வெறி விலக்கிக் கூறியது]

கண்டேன் புகலிக் கருத்தனைத் தன் மெய்ஞ்ஞான
வண்டேனுண் டேமகிழும் வண்டானேன்—பண்டே
யளியனுமா னேன்மனமெய் யார்பதம்வே றின்றிக்
குளிர்சிவா னந்தமிலங் கும். கஎ

கும்பிட்ட பத்தர்க் கழியாத இன்பங் கொடுக்குமுத்தர்
வம்பிட்ட கொங்கை யுமைபாகர் சண்பையர் வந்திலரேல்
கொம்பிட்ட கோழிக் கொடிவேந்தன் கொச்சையைக்
கொல்வதனால்
அம்பிட்ட கட்சிற் றிடைச்சிக்கென் னேபய னாகுவதே. கஅ

ஆகுவா கனனைத் தோகைவா கனனை
யுற்றசீர் மகாரெனப் பெற்றசுந் தரனே
ஞானவா ரிதியி லானவா ரமுதே
கற்றவர் கருது நற்றவக் கரும்பே
யிருட்குறம் பெறிந்த வருட்கலா மதியே
கதிர்த்தொகை குன்ற துதித்தசெங் கதிரே
நிறைந்தவன் பலரி லுறைந்தசெந் தேனே
துன்பமொன் றறியா வின்பவா ரிதியே
மறைமுடி விளக்குஞ் சுடர்விடு மணியே
விறலரி பிரமன் பெறலரும் பொருளே
சிற்பநூல் முழுதும் அற்பமின் றுணர்ந்த
ஓவிய ரற்புத மேவுகைத் தொழிலர்
சுத்தவெண் படிகப் பித்திகைத் தலத்தின்
நவமணி தெளித்துக் குவவின கூர்நுதித்
தூரியங் கொண்டு சீரிதிற் குயிற்றும்
இமைப்பிலா நாட்டத் தமைப்பருங் கலாப
நீலமே காரமுங் கோலமார் குயிலும்
துப்பமர் வளைவா யொப்பறு பச்சைத்
தகைசிறைக் கிளியும் புகைநிறப் புறவும்

மேல்நிமிர் தூவிப் பால்நில வனமும்
நன்மது நிகர்த்த இன்மொழிப் பூவையும்
இனமெனக் கருதி மனமுவந் தணைத்த
உயிர்நிலை பெற்ற மயில்முதற் பறவையும்
கூறுபட நோக்கினர் வேறுபா டறியா

வளனொடு செறிந்த அளவிலா மாடத்து
உறைதரு கற்பு நிறைகுல மடவார்
அளிமுரல் குழலு மொளிகிளர் முகமும்
குலாவிய புருவமு நிலாவிரி குழையும்
நறியமென் சொல்லுஞ் சிறியநுண் ணிடையும்

தத்துநீ ருவரி முத்தமா லிகையும்
பிரளய வெள்ளத் திரளினு மழியாத்
திருநக ரிதுவெனக் கருதிவான் முகிலும்
சந்திர விம்பமும் இந்திர தனுவும்
இலங்குசெங் கதிருந் துலங்குவா னமுதும்

வாரா மின்னுந் தாரா கணமும்
ஒருங்குவந் திருந்த பெருந்திற னெய்ப்பக்
காட்சியில் பொலிந்த மாட்சிமை சிறந்த
காழிநா யகனே வாழிபூ ரணனே
எர்தரும் பொற்கிரி சேர்கருங் கொடியும்

பொன்னிற மாமெனச் சொன்னதொன் மொழியும்
எதமில் நிறைமதிச் சீதள நிலவால்
ஆருமெய் யுருப்பந் தீரு மென்பது
மொழிதரு மிரத குளிகைதற் சேர்ந்த
காளிமச் சீருணா நீளியற் கனகம்

ஆமெனக் கூறுந் தோமறு மொழியும்
கருட தியான் மருள்தப வந்தோர்
நோக்கினில் தவிருந் தீக்கடு வென்றலும்
ஆயிரங் கிரணத் தலர்கதிர் முன்னம்
பாயிருள் கெடுமெனப் பகர்பழ மொழியும்

அங்கண்மா ஞாலத் தெங்கணு மொப்ப
இயலும் பட்டாங் கயலல வென்னல்
சாரத மெய்ஞ்ஞான வாரதிற் சேர்ந்த
பேதையேன் பாசத் தீவினை யகற்றித்
திருவருட் செல்வம் பெருகுமா றுதவி
யளித்தருள் பேரின் பாகும்
களிதரு முத்திக் காழியான் கனியே. க௯

## [தலைவியின் ஆற்றாமை கண்டதோழி அன்னத்தைத் தூது விடுத்துக் கூறியது]

காழிக்கு வேந்தர் கருணை யுயர்முனநீ
காழிக் குமாரன் கவிகையினை—யாழிக்கண்
கண்டமட்டிற் சூடகமுங் கார்விழியிற் கங்கணமும்
கொண்டவளென் றன்னமே கூறு. ௨௰

கூறுஞ் செனனக் குழிவீழ்ந்து நாளுமை கூன்முழுதும்
ஆடும் படிக்கு மருந்துள தோ சண்பை யாணர்கொண்ட
நீறுந் திருவெழுத் தோரைந்துங் கண்டியு நித்தநித்தம்
தேடும் பொருளென் றுணராத மாயச் செருக்கினர்க்கே.

செருக்குட னிகலித் தருக்கமே யேற்றி
யெம்ம னோரின் இறந்துபிறந் துழலும்
மம்மரிற் பெரிய மானவர் குழுவை
மெய்ப்பொரு ளொன்று கைப்பொரு ளுதவியம்
முழுக்கிய நெஞ்சத் தழுத்தியும் மறிதே
புறவார் பசும்புற் கறவாக் கற்பசு
வாயிடைச் செருகித் தாயநீ ருதவி
அருஞ்சுவைப் பால்கொளப் பெருஞ்சுரை வருடும்
பேதையர் போலவும் ஓதாஞ் சமயரும்
மெட்டியை விரும்பு மட்டுநீர்த் தேக்கி
சழுமை கல்லா மேல்கிமிர் வேலி

யுறும்படி யமைத்து நறுங்கனி கொள்ளக்
கருதி முயலுந் திருவிலி போலவும்
இலகுவா லரிசி யுலைபெய எண்ணி
வெற்று மிகுற்றும் பற்றிலர் போலவும்
அருநிலம் உழுதநி னெருமிகப் பெய்து
வித்திட் டாங்கே விளைபயன் கொள்ளச்
சித்தத் துன்னும் மத்தர் போலவும்
வாழ்நா ளனைத்தும் வீழ்நா ளாக்கி
இம்மையு மறுமையுஞ் செம்மையிற் பொருந்தாது
இடருறு மாந்தர் புடவியிற் பலரால்
அன்னவா றெளியனு முன்னி மதிமயங்காது
எய்ப்பினி லுதவு மெய்ப்பொரு ளாகி
என்றுமோ ரியல்பொடு நின்றகா ரணநின்
சேவடித் தாமரைப் பூவினைப் புனைந்து
நாத்தழும் பேற வேத்தியுள் ளுருகிப்
பெருகிய வன்பென வருநீர் நிறைந்த
இதய வாவிப் பதுமமா மலரின்
குணனெனப் பொருந்து மணமா நின்னைக்
கண்டிறு மாந்து பண்டைவா தனைதீர்ந்து
அறைகட லழுந்து நிறைகுட மதுபோன்று
அசைவற் றிருக்க விசையத் தருதி
நிலைமிகப் பொருந்திப் பலமுறை சாரலால்
உந்திய வன்ன வுருமரு வுதலான்
மந்திரத் துறுசுடர் மகத்துயர் தவினால்
இதம்பயி லிசைகொள் பதங்கலந் துறுதலால்
வேதமே யொப்பென வோதுகோ புரமும்
ஒழுக்குநெறி சிறிதும் வழுக்கில வதனால்
நாற்பதப் பிரிவின் மேற்பத மதனால்
பலகலை யொளிர்மதி நிலவிய வதனால்
முத்தரை வியக்கும் பத்திமை யதனாற்
சிவாகம மெனவொளிர் தவாமணி மேடையும

வெள்ளைவா ரணமேற் கொள்ளுமாங் கதனால்
கட்டா மரைபல மட்டார் தவினால்
அஞ்சுமந் தாரம் விஞ்சியோங் குதலால்
இந்திர னெனப்பொலி மந்திர வாவியும்
எங்கணு நிறைந்த வெங்குரு நாதா
கருவலி தொலைக்கும் பெருமலை மருந்தே
கருணைசூற் கொண்ட பெரியவான் முகிலே
சிற்றிடைக் கருங்கண் பொற்றொடிக் கரத்தால்
ஆகமார் வனமுலை யணையும்
போகமா ரிதழிப் பூங்கண் ணியனே. ௨௨

[அந்தி கண்டு ஆற்றாத தலைவியது நிலைமை நோக்கித் தோழி கூறியது]

கண்ணின் றொளிருங் கருமணியி னுள்ளொளிபோல்
உண்ணின் றொளிரு மொளிவிளக்கென்—றெண்ணிப்
புகலிப் பெருமானைப் புண்ணியனைப் போற்றி
அகலுமே பாசவிரு ளன்ற. ௨௩

இருளந் தகன்வரி னீரெயி றேபிறை யேய்ந்தசெவ்வான்
சுருளகுஞ்சி பாசமெனவெந் திவந்தது தோகைசொற்றேன்
பருகும் புகலிப் பிரானெனும் பானுப் பலகிரணம்
பெருகும் படிவந் துதித்தால் மின்னுவி பெறுகுவளே. ௨௪

பெறுவது பெற்ற உறுதிபுத் தமர்கட்கு
ஆயினுஞ் சிறந்த நேயநெஞ் சினனே
யாகக் கழனியின் யோகத் தபோதனர்
ஆன பேருழவர் மானமோ டாக்கிய
முயலக னென்னு மியல்பெருங் கரும்பை
உதிர மென்னு முதிர்சா றொழுக
நகையெனு முத்தந் தொகையுறத் தோன்றச்
சுந்தரப் பதமெனு மெந்திர ஆலையிட்டு
அகோரத்தக வயிரங் கரைத்தவித் தகனே

குங்குமக் கொங்கை அங்கயற் செங்கண்
பெண்ணர சிபிரியா வண்ணமெய்ப் பாக
பாடலம் புன்னை யேடவிழ் இலஞ்சி
வெளியகற் பூரங் களிகொள் கத்தூரி
நறுமண மெவையும் உறுமுறை பொருந்தி
உண்ணீர் பெற்ற தண்ணீர்ப் பந்தரும்
நெய்கமழ் கருனையுங் குய்கமழ் கறியும்
மதிதரு நிலவெனப் புதியவெண் தயிரும்
வருக்கையின் கனியுஞ் சருக்கரைக் கட்டியும்
முதலுப கரணம் பதனொடு மரீஇத்
தளவுஅரும் பென்ன வளமலி போனகம்
மாதவ ரெயர்க்கும் ஆதுல ரெவர்க்கும்
நன்னயத் துடனரு ளன்ன சத்திரமும்
பாடகச் சீரடிப் பால்மொழி மடவார்
நாடகத் தொழில்பயில் நீடரங் கெவையும்
கலைபயில் கழகமும் பலர்பயில் மன்றமும்
உள்ளன கரவா துவந்தெதிர்ந் தளிக்கும்
வள்ளியோர் வாழும் மணிநெடு வீதியும்
பூமக ளுறைவு ளாமென விளங்கும்
பெரும்புகழ்க் காழி விரும்பசங் கரனே
ஏங்கெழிற் புவன வேந்தநீ யாதலின்
வளமலி நான்முகக் களமருன் வயலின்
உரம்பெறு குலவரைக் குறும்பகப் பட்ட
மண்டல மென்னுங் கண்டநீள் வயலுள்
சராசரத் தொகுதி விராயவித் திட்டுப்
பாதவ மிருகம் பறவை மானிடர்
ஆதிப் பைங்கூ ழமைத்தனர் நிற்ப
மாவுறழ் மருமக் காவ லாளர்
வளமையி னோம்ப விளைவுமுற் றியபின்
புரிபயன் பெறுவான் அரிதர வியற்றி
மெய்வலிக் கூற்றுவக் கைவினை மாக்களில்
புலாலுடை யாக்கைப் பலாலம தகற்றி

அற்றமி லுயிரெனப் பெற்றநெல் திரளைப்
பூதசா ரத்ததுப் பூத மகாதது
பூதபரி ணமம் புகலுறு யாக்கை
மூவகைப் பண்டியின் மேவர வேற்றிப்
பொன்னிலம் நிரயம் இந்நில மென்னும்
இடந்தொறு மாக்களை அடங்கவைத் தவற்றுள்
ஒருசில வற்றைநின் திருவடி வீட்டில்
சேர்த்தனை யன்னது கூர்த்து நோக்கில்
அரசுகொள் கடமை யாறிலொன் றென்னும்
புரைதீர் முறைமை புதுக்கினை போலும்
அதனால்
மாசுக நீயுறும் வண்மை
பேசுக கருணைப் பெரியநா யகனே. உரு

[தோழி தலைவனிடம் பிரியா வரம் வேண்டல்]

பெருமானே கூடிப் பிரிந்தாலும் மங்கைக்கு
ஒருவரா தருள்வர மொன்றுண்டே—திருமால்
விடையாய் புகலி விமலா மவுன
விடையாய் பிரியா விடை. உசு

விடையம் பொருளென் றுணராத மார்க்கம் விரும்புமழுப்
படையம் புயக்கரத் தெந்தாதை ஞான பரமவென்றெண்
சடையம் புனலணி வேணு புரேசனந் தாண்மலர்தா
விடையம் பொருளென் றிருநீயென் றுண்மைவிளம்பினனே.

விளம்புவன் யானென் றுளம்புகும் நெறியால்
எழுத்தி னுறழாது வழுத்து பொருளின்றிக்
குறிப்பொடு படாது வெறித்தபுன் சொல்லே
ஆயினும் பயந்தநஞ் சேயவர் சொலும்மொழி
குழலினு மியாழினும் அழகிதா மதுபோல்
நற்றா யாகியப் பெற்றா யென்சொல்
திருச்செவிக் கேறும் பொருத்தமுண் டதனால்

கேட்டி கேட்டி வாட்டமில் பெரியோய்
மதுமழை பிலிற்றிப் புதுமணம் விரித்துப்

பற்பல உதவுங் கற்பகத் தருவும்
நந்தா வளனருட் சிந்தா மணியும்
வாமமா மேனிய காம தேனுவும்
அருளிய ஏவல் வரன்முறை கேட்பக்
கடவுள ரணிமணித் தடமகு டங்கள்

கால்துணை வருடப் போற்றின ரிறைஞ்சி
முனிவ ராசி நனிபல மொழியக்
கரம்பயில் கவரி யரம்பைய ரிரட்டக்
கின்னரர் விபஞ்சி நன்னரம்பு உளரா
இசையமு திருஞ்செவி மிசையெடுத் தூற்ற

முடங்குளைச் செங்கண் மடங்கலணை நாப்பண்
அமுதுகு மென்சொல் குமுதமென் செய்வாய்
இந்தி ராணி வந்தரு கிருப்பக்
கருமுகி லாயிரந் திருமலர் பூத்துச்
செங்கதிர்ச் சேகரந் தங்கவீற் றிருந்த

பெருந்திறல் கடுப்ப இருந்துவிண் புரக்கும்
அண்ணல் புரந்தரப் பண்ணவ னரசும்
பழமறை கனிந்து மழவுபெற் றிருந்த
செந்நாத் தவிசின் முன்னாள் தங்கிப்
பனுவ லாட்டி இனிதுவந் திருப்ப

வண்டுபாண் முரன்று கிண்டுபு உதைந்து
பொற்று துண்ணு முற்று வின்பப்
பிரசமுற் றிருந்த வாசரோ ருகத்தன்
நெருக்கிய புவனப் பெருக்கினைத் தனது
திண்ணிய மனத்திடை யெண்ணியாங் கியற்றி

எம்மா லெவையு மியன்றன வென்னச்
செம்மாந் திருக்குஞ் சிறிய வாழ்க்கையும்
திதலைபூத் தலர்ந்து மதகளி றிகலி

வருமுலை சுமந்த திருமகள் பச்சைப்
பசுந்துழா யலங்க லசும்புதேன் துளித்துக்
கடிகமழ் மார்பில் குடிபுகுந் திருப்பத்
தண்ணிலை வெண்விரி வெண்ணிறப் பாற்கடல்
ஒல்லொழித் தரங்க மெல்லடி வருடக்
காமர்தென் காலெனுஞ் சாமரை யசையத்
துத்திநெய் பாந்து பைத்தலை யகலில்
அணிகிளர் பலகதிர் மணிவிளக் கொளிரச்
சுடிகைவா ளரவ நெடியபூ வணைமேல்
மறுவிலா நீல வரைகிடந் தென்ன
அறிதுயி லமர்ந்த அச்சுதன் வாழ்க்கையும்
அழியா வின்பமென் றொழியா துரைப்பினும்
கற்றவர் கருத்தி னுற்று நோக்குழி
இந்திர சால முந்துநீள் கனவு
வெண்டேர் போல உண்டெனத் தோன்றி
இல்லா மாதலின் நலமல வாங்கவை
நிலையே றுடையது நின்னருட் செல்வம்
அன்னதே பெறுதற்கு உன்னினன் றமியேன்
அதனால்
எளிதினின் இரங்கி யளிசுரந் தருளுதி
மரகதத் திடையிடை தரளமிட் டிழைத்த
வாமிய மதலை விரிகுழை பொதுளி
அரும்பிய புன்னைப் பெரும்பொழி லெனவும்
ஆடக வலங்க லணியணி நிறைத்த
சேடுயர் நீணிறச் செய்குன் றதனைத்
துணர்த்தபூங் கொன்றை மணத்தகா வெனவும்
மொய்க்கும்வண் சிறையளி மைக்கரு நிறங்கள்
பளிங்கரிந் தியற்றிய துளங்கொளி மாடப்
பித்திகைத் தலத்திசைப் பத்திபாய் தலினால்
மத்திங் கிரவெனச் சந்தத மடவார்
வார்முலை யாடவர் மார்பிடைக் குளிப்பப்
புல்லிய கலவிப் புதியதேன் நுகரும்

மல்லலங் காழி வளநகர் வாண
குறிகுணங் கடந்த மறுவில்மா மணியே
உறைபொரு ளெங்கணும் நிறைபரி பூரணம்
அந்த மாதி முந்தையே தவிர்த்த
அனாதி முத்த வனாதி நித்த
அருவுரு வில்லா ஒருபெரும் பொருளே
அளவையி னடங்கா தொளிர்சுக நேய
உருகுமெய் யன்பர் பருகுமா ரமுதே
நலங்கனி பெரிய நாயகி
கலந்தபே ரின்பில் களித்தபண் ணவனே. உஅ

*[தலைவனும் தலைவியும் உரையாடியதைச் சிறைப்புறமாக இருந்த தோழிகேட்டு, அதனைத் தலைவியிடம் கூறி நகையாடியது]*

பணமஞ் சரையிருக்கப் பாவையரைச் சும்மா
புணர்கின்றீ ரென்று புகலப்—புணர்வார்க்கு
அரைக்காசு தந்தனமென் றூர்புகலி யார்மா
அரைக்காசென் றோதற்கு மான். உ௯

மானைக் கலந்த மணவாளன் காழி வரதன்செங்க
ணானைப் புரந்தவன் பத்தர்க்கு முத்தி யளித்தருளும்
ஏனைப் பெரும்பொருள் கல்விமெய்ச் செல்வ மிருந்தளிப்பார்
தேனைத் தருஞ்செழுந் தாமரை நாமகள் செந்திருவே. ௩௰

## ௩. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

### இணைக்குறளாசிரியப்பா

தெய்வத் தாமரைச் செல்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றாது
வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்கு
ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி யகஞ்சேர்ந்து
மறுவில் கற்பகத்து உறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாள்உகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற்று அரவக் கச்சையாப் புறத்துப்
பொலிந்துள தொருபால் திருவிடை இலங்கொளி
அரத்த ஆடை விரித்துமீ தூரீஇ
இரங்குமணி மேகலை ஒருங்கு ன் சாத்திய
மருங்கிற் றாகும் ஒருபால் திருஇடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையுங்
கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்
நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்தோர் பவளவெற் பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் வர்பெறப் புனைந்து

செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்
பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகே ழீன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவும்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரஞ் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
ஓம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்
தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்
இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்குந் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டுநீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்று
எம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கண் தலையும்
அரவும் மதியமும் விரவித் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகங் கரந்த பால்நிற அன்னம்
காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுள் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து
வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்

திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி
இனைய வண்ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி
வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாள்நுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்கு
உலகம் ஏழும் பன்முறை யீன்று
மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே. க

பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதா ரென்பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும். உ

வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதில்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன் ஒருவரை யாதொன்றுமே. ங

ஒன்றினொ டொன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
ஓவநூல் செம்மைப் பூவியல் வீதி
குயிலென மொழியும் மயிலியல் சாயல்
மான்மற விழிக்கும் மாணர் செல்வத்(து)
இடைமரு திடங்கொண் டிருந்த கார்கை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்றல்
ஆரணந் தொடராப் பூரண புராண

நாரணன் அறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யானென் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியில்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழீஇத்
தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்து
யாயுறு துயரமும் யானுறு துயரமும்
இறக்கும் பொழுதின் அறப்பெருந் துன்பமும்
நீயல தறிகுநர் யாரே அதனால்
யான்இனிப் பிறத்தல் ஆற்றேன் அஃதான்(று)
உற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியின் இல்லைஅந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலும் ஆண்டொன்றிற் படரா
உள்ளமொன் றுடைமை வேண்டும் அஃதன்றி
ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையும்
இதுவென துள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙனம் முன்னம்
கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
எற்பிற ருளரோ இறைவ கற்பம்
கடத்தல்யான் பெறவும் வேண்டுங் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உறையெயிற் றரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே. ௪

கண்ணென்றும் நந்தமக்கோர் காப்பென்றுங் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூல எழுத்தென்றும்—ஒண்ணை
மருதஅப்பா என்றும்உனை வாழ்த்தாரேல் மற்றும்
கருதஅப்பால் உண்டோ கதி. ௫

கதியா வதுபிறி தியாதொன்றும் இல்லை களேபரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப் போம்இது போனபின்னர்

விதியா மெனச்சிலர் நோவதல் லால்இதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ லேசென்று வாழ்த்துவதே.

வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க்கு உதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்காது
ஈண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே
ஆரா உண்டி அயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனும் ஒழுக்கமுங் கல்வியும்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதன் ஏவல் கேட்கும்
சிறாஅர்த் தொகுதியின் உறாஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஒரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய அந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைமையள் ஆயினும்
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி யுண்டிவேட் டிருப்ப
எள்ளுக் கெண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்
ஆற்றல் செல்லாது வேற்றோர் மனையின்
கற்புடை மடந்தையர் பொற்பு நனிகேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியின்
அகமலர்ந் தீவார் போல முகமலர்ந்து
இனிது மொழிந்தாங்கு உதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்தவர்
தாளின் ஆற்றலுந் தவிர்த்துக் கேளிகழ்ந்(து)

இகமும் பரமும் இல்லை என்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையும் ஒருவ ராக உன்னும்
எனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்க்(து)

யோசனை கமழும் உற்பல வாவியில்
பாசடைப் பரப்பிற் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமுஞ் சூழ்ந்த மருத வாண

சுருதியுந் தொடராச் சுருதி நாயக
பத்தருக் கெய்ப்பினில் வைப்பென உதவும்
முத்தித் தாள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனைவியும் ஒக்கலுந் திருவும்

பொருளென நினையாதுன் அருளினை நினைந்(து)
இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து

சிதவலோ டொன்(று) உதவுழி எடுத்தாங்கு
இடுவோர் உளரெனில் நிலையில்நின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளிமேவி யோவாத்
தகவெனும் அரிவையைத் தழீஇ மகவெனப்
பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்குநின்

செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கின் உற்றநா யேற்குக்
குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப்
பிரளயச் சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற் றாதலின்

நின்சீ ரடியார் தஞ்சீ ரடியார்க்கு
அடிமை பூண்டு நெடுநாள் பழகி
முடைதலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
கால்தலை ஏவல்என் நாய்த்தலை ஏற்றுக்
கண்டது காணின் அல்லதொன் று
உண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே. எ

பிறிந்தேன் நரகம் பிறவாத வண்ணம்
அறிந்தேன் அநங்கவேள் அம்பில்—செறிந்த
பொருதவட்ட வில்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டந் தன்னுளே வந்து. அ

வந்திக்கண் டாய்அடி யாரைக்கண் டால்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாய்அரன் செம்பொற் கழல்திரு மாமருதைச்
சந்திக்கண் டாய்இல்லை யாயின் நமன்தமர் தாங்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை வீழ்த்தி உழக்குவரே. ௯

உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்(து)
அன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா இடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக் கஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட் டம்மெனக்

கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து புண்ணிய
அஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்குஞ் சுடர்முகம் ஐந்தும்
பவள நிறம்பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை அதனினும் உறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதரும்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம ஞோர்கள் இனிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா வுணர்வெனும் புல்வாய் அலமர
விச்சைவித் துதிர்த்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
*பொய்யென கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பலகாய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவா(து)
இமைப்பிற் கழியும் இயற்கையோர் உடைத்தே. க0

உடைமணியின் ஓசைக் கொதுங்கி அரவம்
படம்ஒடுங்கப் பையவே சென்றங் — கிடைமருதர்
ஐயம் புகுவ தணியிழையார் மேலனங்கன்
கையம் புகவேண்டிக் காண். கக

காணீர் கதியொன்றுங் கல்லீர் எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர் அவன்புகழ் ஆசைப்பட்டுப்

பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப் பிரான்கழல் மேவுதற்கே. ௧௨

மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்(து)
இடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்(று)
ஊறும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்
பிரியா தொறுக்கும் பிணியோ தெரியாது
இன்ன தியானென் றறியேன் என்னை
எதினுந் தேடினன் யாதினுங் காணேன் முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தை அழலூட்டிக்
கண்படை யாகக் காமனை யொருநாள்
நுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருஅமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய

ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையும் கண்டேன் என்னை
நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே. கங

ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராபோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம். கச

**[தலைவன் தலைவியது நலத்தைப் பாராட்டிக் கூறியது.]**

நாமே இடையுள்ள வாறறி வாம்இனி நாங்கள்சொல்லல்
ஆமே மருதன் மருத வனத்தன்ன மன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய் தார்ஒரு பொட்டும்இட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம் ஏற்றுதல் தக்கதன்றே. கரு

அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்று வளைத்தெய்த குன்றாக் கொற்றவ
நுண்பொடி அணிந்த எண்டோள் செல்வ
கயிலை நடந்தனைய உயர்நிலை நோன்றாள்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதிமில்
பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமையச் செல்வன்
மணியெனப் பெற்ற அணியியல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற் றம்மைப் பிராட்டி
மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையாள் உடைய உமையாள் நங்கை

கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பணைக்கைபோந் தனைய
தழைசெவி எண்தோள் தலைவன் தந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வேல்
அமரர்த் தாங்குங் குமரன் தாதை
பொருதிடம் பொன்னி புண்ணியம் புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனில்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை யடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்றுகன் னகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே. ௧௬

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன் றொடொவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும். ௧௭

தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்
சங்கிலை செய்யாது யாங்கள் எல்லாம்
பழுதின்று உயர்ந்த எழுநிலை மாடத்தும்
செழுந்தாது உதிர்ந்த நந்தன வனத்தும்
தென்றல் இயங்கும் முன்றில் அகத்தும்
*தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்
மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டாண்டு இட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுள் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீமிசைப் பரிபுரம் மிழற்றச்
சாயல் அன்னத்தின் தளர்நடை பயிற்றிப்
பொற்றோ ரணத்தைச் சுற்றிய துகிலென
அம்மென் குறங்கின் ஒம்மென் கலிங்கம்
கண்ணும் மனமுங் கவற்றிப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கிற் கிடப்ப
ஆடர (வு) அல்குல் அரும்பெறல் நுசுப்பு
வாட வீங்கிய வனமுலை ததிப்ப
அணியியல் கமுகை அலங்கரித் ததுபோல்
மணியிய லாரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கும் அணிசெழு மென்தோள்
வரித்த சாந்தின் மிசைவிரித்து இட்ட
உத்தரியப்பட் டொருபால் ஒளிர்தர
வள்ளை வாட்டிய ஒள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்கு
ஒழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலுங் காம பாணமும்

ஆல காலமும் அனைத்துமிட் டமைத்த
இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழல்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்து
அறுசுவை யடிசில் வறிதினி தருந்தாது
ஆடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோ மாயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை யன்றோ என்னெனில்
வல்லான் ஒருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே. ௧௯

நாமம்நவிற் றுய்மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல்—ஆமோ
பொருதவனத்து ஆனையுரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வளைந்து. ௨௰

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன் அம்புக்கு
இளையார் தளர்ந்தண் டிரங்கிநில் லார்இப் பிறப்பினில்வந்து
அளையார் நரகினுக் கென்கட வார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையான் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. ௨௧

அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வம்
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறிப்புத் துளையின் இருசெவிக் கெட்டாது
உறப்பில்நின் றெழுதரும் உள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்
வினைய தன்மையும் எய்தா தெவற்றையும்
தானே யாகி நின்ற தத்துவ
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்விரி கண்டத் தேக நாயக
சுருதியும் இருவருந் தொடர்ந்துநின் றலமர
மருதிடங் கொண்ட மருத மாணிக்க
உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத் தென்தனி நாயக
அடியேன் உறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கன்மனக் கயவரொடு
நெடுநாள் பழகிய கொடுவினை ஈர்ப்பக்
கருப்பா சயமெனும் இருட்சிறை யறையில்
குடரென் சங்கிலி பூண்டு தொடர்ப்பட்டுக்
கூட்டுச் சிறைப்புழுவின் ஈட்டுமலத் தழுந்தி
உடனே வருந்தி நெடுநாள் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லல் படுத்தும்
தண்ட ளாளர் மிண்டிவந் தலைப்ப
உந்தி நெருப்பிற் பதைபதை பதைத்தும்

வாதமத் திகையின் மோதமொத் துண்டும்
கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லாது
இடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்
பாவப் பகுதியில் இட்டுக் காவல்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
மேவற்ஞேர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவருங் கடுப்ப அவாவது கூட்டி
ஈண்டின கொண்டு மீண்டு வந்துழி
இட்டுழி யிடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்
நின்னை யடைந்த அடியார் அடியார்க்கு
என்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்ட பச்சிலைகொண் டொட்டி நன்கறிவித்து
இச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. ௨௨

[தலைவன் பிரிந்தமையால் வளை முதலியன இழந்து வருந்தி,
ஞட்குத் தோழி தலைவனது இயல்பு கூறியது]

சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய—இடையேபோய்ச்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்பது
எங்கே யிருக்க இவள். ௨௩

இருக்கும் மருதினுக் குள்ளிமை யோர்களும் நான்மறையும்
நெருக்கும் நெருக்கத்தும் நீளகத் துச்சென்று மீளவொட்டாத்
திருக்கும் அறுத்தைவர் தீமையுந் தீர்த்துச்செவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே முளைக்கின்ற ஒண்சுடரே. ௨௪

சுடர்விடு சூல மேந்தினை என்றும்
விடையுகந் தேறிய விமல என்றும்
உண்ணா நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணாற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்
கரியுரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்
சிரகஞ் செந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்
சலந்தரன் உடலந் தடிந்தனை என்றும்
அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலியுரி உடுத்தனை என்றும்
ஏனமும் அன்னமும் எட்டா தலமர
வானங் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
செழுநீர் ஞாலஞ் செகுத்துயிர் உண்ணும்
அழல்விழிக் குறளினை அமுக்கினை என்றும்
இனையன இனையன எண்ணில் கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயிற் புகழ்தல்
துளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலின்
அளப்பரும் பெருமைநின் அளவல தாயினும்
என்றன் வாயிற் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை
இடுக்கண் களையா அல்லற் படுத்தாது
ஒருநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல

நுண்துகிற் பதாகை கொண்டுகொண்டு உகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர்
அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்த
கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின்நினைந்து எறிந்த அதனால்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே. உரு

இன்றிருந்து நாளை இறக்குந் தொழிலுடைய
புன்தலைய மாக்கள் புகழ்வாரோ—வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி. உசு

அடிஆ யிரந்தொழில் ஆயின ஆயிரம் ஆயிரம்பேர்
முடிஆ யிரங்கண்கள் மூவா யிரம்முற்றும் நீறணிந்த
தொடிஆ யிரங்கொண்ட தோளிரண் டாயிரம் என்று நெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு தாளியைப் பற்றிக்கொண்டே. உஎ

கொண்டலின் இருண்ட கண்டத் தெண்தோள்
செவ்வான் உருவிற் பையரவு ஆர்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கைலாய வாண கௌரி நாயக
* நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கண் கூத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வரன்முறை படைத்த நான்முகத் தொருவனும்

(பா-ம்.) * நின்னருள் சுரந்து பொன்னடி பணிந்து

தாருகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும்

ஆனைப் பெருந்திறல் வானோர் தலைவனும்
செயிர்தீர் காற்கோட் டயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனுஞ் செந்தீக் கடவுளும்
நிருதியு மியமனுஞ் சுருதிகள் நான்கும்

வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்
எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்

வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு

கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி ஊளைகேட் டரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று

காசும் பொன்னும் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்

மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி

உம்மைப் போல எம்இத் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்டம் எடுத்தும்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்
இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதோர் பாடும் இன்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையேன் நின்னை
இறைஞ்சில னாயினும் ஏத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னால கனைத்தும் நன்மை தீமை
யானவை நின்செய லாதலின்
நானே யமையும் நலமில் வழிக்கே. உ௮

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம்—பொழில்சூழ்
மருதிடத்தான் என்றொருகால் வாயாரச் சொல்லிக்
கருதிடத்தான் நில்லா கரந்து. உகூ

கரத்தினில் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதஅப் பாமதி யொன்றுமில்லேன்
சிரத்தினு மரியென்றன் சிந்தையு ளாகிவெண் காடன்என்னும்
தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே. ௩0

திருச்சிற்றம்பலம்

# ௪. திருவேகம்பமுடையார் திருவந்தாதி

மெய்த்தொண்டர் செல்லும் நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்டு வந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேயுன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி யோகச்சி ஏகம்பனே. க

ஏகம்ப னேஎன்னை ஆள்பவ னேஇமை யோர்க்கிரங்கிப்
போகம்பன் னாளுங் கொடுக்கின்ற நாயக பொங்கும் ஐவாய்
நாகம்பொன் ஆரம் எனப்பொலி வுற்றுநல் நீறணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ னேஎன்பன் ஆதரித்தே. உ

தரித்தேன் மனத்துன் திகழ்தரு நாமந் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப னேஎன்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர் ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யாரடி பூணத் தெளிந்தனனே. ௩

தெளிதரு கின்றது சென்றென் மனம்நின் திருவடிவம்
அளிதரு நின்னருட்கு ஐயம் இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனிஎம் ஏகம்ப னேஎன் றுகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் றன்தலை மேல்வைத்த தன்மைபெற்றே. ௪

பெற்றுகந் தேனென்றும் அர்ச்சனை செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந் தேன்என் கருத்தினி தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ னேபட நாகக்கச்சின்
சுற்றுகந்து வர்விடை மேல்வரு வாய்நின் துணையடியே. ௫

அடிநின்ற சூழல் அகோசரம் மாலுக் கயற்கலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை ஏகம்ப யாமெங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை யானை வணங்குவதே. ௬

வணக்கந் தலைநின் திருவடிக் கேசெய்யும் மையல்கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி வோம்அல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி ஏகம்பம் பாடின்அல்லால்
கணக்கன்று மற்றொரு தேவரைப் பாடுங் கவிநலமே. எ

நலந்தர நானென்று சொல்லுவன் கேண்மின்நல் லீர்கள்அன்பு
கலந்தர னார்கச்சி ஏகம்பங் கண்டு கனல்திகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத் தாய்தக்கன் வேள்வியெல்லாம்
நிரந்தர மாகச்செய் தாயென்று பூசித்து நின்மின்களே. ௮

[தலைவனது உருவெளிகண்டு வருந்துந் தலைவிக்குத் தோழி கூறியது]

மின்களென் றார்சடைகொண்டலென் றார்கண்டமேனிவண்ணம்
பொன்களென் றார்வெளிப் பாடுதம் பொன்னடி பூண்டுகொண்ட
வென்களென் றாலும் பிரிந்தறி யார்கச்சி ஏகம்பத்தான்
றன்களென் றாருல கெல்லாம் நிலைபெற்ற தன்மைகளே. ௯

[தலைவன், வேறுபாடுகண்டு வினவிய பாங்கற்கு ஏது கூறியது]

தன்மையிற் குன்றாத் தவத்தோர் இமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலுஞ் சேயரிக் கண்ணும் புரிகுழலும்
மென்மயிற் சாயும் மருங்குலுங் காதல் விளைத்தனவே. ௧௦

[தோழி, யானை வினவிவந்தார் ஒருவரெனக் கூறித் தலைவியது குறிப்பு உணர்ந்தது]

தனமிட் டுமைதழு வத்தழும் புற்றவர் தம்அடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு வினவியோர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம் பொழுதும் பூங்கொடியே. ௧௧

[தோழி தலைமகளது மேனி வேறுபாட்டால் அணங்கெனக் கூறியது]

பூங்கொத் திருந்தழை யார்பொழிற் கச்சிஏ கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக் கயிலையெம் பொன்னொருத்தி
பாங்கொத் திருந்தனை ஆரணங் கேபடர் கல்அருவி
ஆங்கத் திருந்திழை யாடிவந் தாற்கண் டடிவருத்தே. ௧௨

[மான் வினவி வந்தாற்குத் தினைப்புனம் காக்குந்தொழில் எமக்கு என்று தோழி கூறியது]

வருத்தந் தரும்மெய்யுங் கையில் தழையும்வன் மாவினவும்
கருத்தந் தரிக்கும் நடக்கஇன் றைய கழல்நினையத்
திருத்தந் தருளுந் திகழ்கச்சி ஏகம்பர் சீர்க்கயிலைத்
துருத்தந் திருப்பதன்று இப்புனங் காக்குந் தொழிலெமக்கே.

[மான் வினவி வந்தாற்கு ஆயத்தார் கூறியது]
எம்மையும் எம்மைப் பணிகொள்ளுங் கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத் தேவிட்டு வந்தமைந்தர்
தம்மையும் மானையுஞ் சிந்தையும் நோக்கங் கவர்வளன்றே
அம்மையும் அம்மலர்க் கண்ணும் பெரியீர் அருளுமினே. ௧௪

[பாங்கி இறைவனை நகுதல்]
அருளைத் தருகம் பரம்பொற் கயிலையுள் எம்ஐயர் அம்(பு)
இருளைக் கரிமறிக் கும்இவர் ஐயர் உறுத்திஎய்ய
வெருள்அக் கலைகளை தன்னொடும் போயின வில்லிமைக்கும்
அருளைத் தருசொல்லி எங்கோ விலையுண்டிவ் வையகத்தே. ௧௫

[தோழி இவர்கூறிய வேட்டை பொய்யென்று உண்மையை உணர்தல்]
வையார் மழுப்படை ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனங் கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்தவெம் பூங்கொடி கொங்கைபொருப்
பையார் அரவிடை ஆயிற்று வந்து பரிணமித்தே. ௧௬

[தோழி நெறியருமைகூறி இரவுக்குறி மறுத்தது]
பருமுத் துதிர்த்திடுஞ் சீர்மத்த யானை நுதல்பகுர்திட்டு
உருமொத்த திண்குரற் சீயத் திரிநெறி ஓங்கு வைவாய்ப்
பொருமுத் தலைவேற் படைக்கம்பர் பூங்கயி லைப்புனத்துள்
தருமுத் தனநகைத் தன்நகை யால்வெற்ப சார்வரிதே. ௧௭

[தோழி அலர் அஞ்சி இரவுக்குறி மறுத்தது]
அரிதன் றிருக்கண் ணிடந்திரம் பாயிரம் போதணிய
அரிதன் திருவடிக் கர்ச்சித்த கண்ணுக் கருளுகம்பர்
அரிதன் திருக்கு அங்குலியால் அழிந்த கயிலைஅல் இங்கு
அரிதன் றிருப்பதெம் பால்வெற்ப எம்மையர்க் கஞ்சுதுமே. ௧௮

[முரசு முழங்கக்கண்டு ஆயத்தார்தம்முள் வருந்திக் கூறியது]
அஞ்சரத் தான்பொடி யாய்விழத் தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரச் சூழ்வரை வீழுநங் கொம்புய்யக் கும்பம்மூழ்கும்
வெஞ்சரத் தாரண வோஅல்ல வோஇவ் வியன்முரசே. ௧௯

[தோழி தாய்துயில் அறியாது நிற்றல்]
சேய்தந்த கைம்மை உமைகண வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாய்உயிர் காப்போன் கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊசலொ டும்விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்ட தோசைப் பகடுவந்தே. ௨0

[தலைவி ஆயத்தை நோக்கிக் கூறியது]
வந்தும் மணப்பெறிற் பொன்அனை யீர்மன்னும் ஏகம்பர்தம்
முந்தும் அருவிக் கயிலை மலையுயர் தேன்இழிச்சித்
தந்தும் மலர்கொய்துந் தண்தினை மேயுங் கிளிகடிந்தும்
சிந்தும் புகர்மலைக் கச்சும்இச் சாரல் திரிகுவமே. ௨க

[தலைவியது வேறுபாடறிந்து ஆயத்தார் வினவியது]
திரியப் புரமெய்த ஏகம்ப னார்திக ழுங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத் திடுதர ளம்வினையோம்
விரியச் சுருள்முத லானும் அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தின் நீர்பெற்ற தென்அங்குப் பேசுமினே. ௨௨

[தலைவி வேங்கையை வெறுத்துக் கூறியது]
பேசுக யாவ ருமைக்கணி யாரென்று பித்தர்எங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில் ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பன் பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதுமில் லாக்குலை வேங்கைப் பெயர்நம்மையே. ௨௩

[தலைவி, கிளி, புனமிவற்றிற்கு நாங்கள் சென்றதைத் தலைவ
னிடம் கூறுங்கள் என்றது]
பெயரா நலத்தெழில் ஏகம்ப னார்பிறை தோய்கயிலைப்
பெயரா திருக்கப் பெறுகிளி காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மனமும்இங் கோடித் தொழுதுசென்ற
தயரா துறையும் வெற்பற்கடி யேற்கும் விடைதம்மினே. ௨௪

[தலைவன் வறும்புனங்கண்டு வருந்தியது]
தம்மைப் பிறவிக் கடல்கடப் பிப்பவர் தாம்வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்தெழில் ஏகம்பர் மொய்கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடின் பந்தருந் தண்புனமே
எம்மைக் கவலைசெ யச்சொல்லி யோவல்லி எய்தியதே. ௨௫

[தலைவன் பொழில் முதலியன நோக்கித் தலைவி சென்ற இடத்தைக் கூறுக என்றது]

இயங்குந் திரிபுரம் எய்தவ கம்பர் எழிற்கயிலைத்
தயங்கும் மலர்ப்பொழில் காள்தையல் ஆடரு வித்தடங்காள்
முயங்கு மணியறை காள்மொழி யீர்ஒழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னார்சென்ற சூழல் வகுத்தெமக்கே. ௨௬

[வேங்கை மலரக்கண்ட தோழி உவந்து தன்னெஞ்சொடு கூறியது]

வகுப்பார் இவர்போல் மணத்துக்கு நாள்மணந் தன்னொடின்பம்
மிகுப்பார்க ளாருயிர் ஒன்றாம் இருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பால் மலர்கொண்டு நின்றார் இடக்க நிலாவுகம்பர்
தொகுப்பால் மணிசிந் தருவிக் கயிலைஇச் சூழ்புனத்தே. ௨௭

[வறும்புனங் கண்டு நின்ற தலைவன் துயர் மிகுந்து கூறியது]

புனங்குழை யாதென்று மென்தினை கொய்ததும் போகலுற்ற
கனங்குழை யாள்தற் பிரிய நமக்குறுங் கையறவால்
மனங்குழை யாவருங் கண்கனி பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழை யாத்தொழும் ஏகம்பர் இக்கயி லாயத்துள்ளே. ௨௮

உள்ளம் பெரியரல் லார்சிறு மானுடர் உற்றசெல்வம்
கள்ளம் பெரிய சிறுமனத் தார்க்கன்றிக் கங்கைஎன்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு ஏகம்பர் விண்அரணம்
தள்ளம் பெரிகொண் டமைத்தார் அடியவர் சார்வதன்றே. ௨௯

அன்றும் பகைஅடர்க் கும்பரி மாவும் மதஅருவிக்
குன்றும் பதாதியுந் தேருங் குலவிக் குடைநிழற்கீழ்
நின்றும் பொலியினுங் கம்பர்தன் னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும் பொலியா இருநிலத்தே. ௩0

நிலத்திமை யோரில் தலையாய்ப் பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியார் எரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள் ஏகம்பங் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர் தம்மின் நடுப்படையே. ௩௧

படையால் உயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச் செல்லும்
நடையால் அறிவின்றி நாண்சிறி தின்றி நகுங்குலத்தில்
கடையாய்ப் பிறக்கினுங் கச்சியுள் ஏகம்பத் தெங்களை ஆள்
உடையான் கழற்கன்ப ரேல்அவர் யாவர்க்கும் உத்தமரே. ௩௨

உத்துங்க யானை உரியார் விரலார் அரக்கன்சென்னி
பத்துங்கை யான இருபதுஞ் சோர்தர வைத்திலயம்
ஒத்துங்கை யால்அவன் பாடக் கயிலையின் ஊடுகைவாள்
எத்துங்கை யாமெனன் றுகந்தளித் தார்கச்சி எகம்பரே. ௫௩

அம்பரங் கால்அனல் நீர்நிலந் திங்கள் அருக்கன்அணு
வம்பரங் கொள்வதொர் வேழத் துரியவன் தன்னுருவாம்
எம்பரன் கச்சியுள் எகம்பத் தான்இடை யாதடைவான்
நம்பரன் தன்னடி யார்அறி வார்க்கு நறுந்துணையே. ௫௪

துணைத்தா மரைஅடி யும்பவ ளத்திரள் நன்குறங்கும்
பணைத்தோள் அகலமுங் கண்டத்து நீலமும் அண்டத்துமின்
பிணைத்தா லனசடை யுந்திரு முக்கணும் பெண்ணொர்பக்கத்து
அணைத்தார் எழிற்கம்பர் எங்கள் பிரானார்க் கழகியவே. ௫௫

அழகறி விற்பெரி தாகிய எகம்பர் அத்தர்கொற்றம்
பழகறி விற்பெரி யோர்தமைப் பற்றலர் பற்றும்அன்பின்
குழகறி வேற்பினுள் ஒன்றறி யார்அறி யாமைதெய்வம்
கிழகெறி யப்பட் டுலந்தார் உலகிற் கிடந்தனரே. ௫௬

கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற பாம்பொரு பால்மதியம் [றை
தொடக்குண் டிலங்கும் அலங்குந் திரைக்கங்கை சூடுங்கொன்
வடக்குண்டு கட்டத் தலைமாலை வாளால் மலைந்தவெம் போர்
கடக்கும் விடைத்திரு எகம்பர் கற்றைச் சடைமுடியே. ௫௭

கற்றைப் பவளச் சடைவலம் பூக்கமழ் கொன்றையந்தார்
முற்றுற் றிலாமதி யின்கொழுந் தேகம்பர் மொய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற் கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ காகித் திகழ்தருமே. ௫௮

தருமருட் டன்மை விலைப்பாற் கமலக்கண் நெற்றியின்மேல்
திருமலர்க் கண்பிள வின்திக ழுந்தழல் செல்வக் கம்பர்
கருமலர்க் கண்ணிடப் பாலது நீலங் கனிமதத்து
வருநுதற் பொட்டணங் குக்குயர்ந் தோங்கு மலர்க்குழலே. ௫௯

மலர்ந்த படத்துச்சி ஐந்தினுஞ் செஞ்சுடர் மாமணிவிட்டு
அலர்ந்த மணிக்குண் டலம்வலக் காதினில் ஆடிவரும்
நலந்திரு நீள்வயி ரம்வெயிற் பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை ஏகம்பர் காதிடமே. ௬௦

காதலைக் கும்வலத் தோள்பவ ளக்குன்றம் அங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை நீற்றின் பொலியகலம்
தாதலைக் குங்குழல் சேர்பணைத் தோள்நறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிடம் ஏகம்பர் சுந்தரமே. ௬௧

தரம்பொற் பழியும் உலகட்டி எய்த்துத் தரந்தளரா
உரம்பொற் புடைய திருவயி றும்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத் தரத்திடு பூண்முலையும்
நிரம்பப் பொருது தளரிள வஞ்சியும் நேர்வுடைத்தே. ௬௨

உடைப்புலி யாடையின் மேலுர கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்தொரு கோவணந் தோன்றும் அரைவலம் மற்றைஅல்குல்
தொடக்குறு காஞ்சித் தொடுத்த அரசிலை தூநுண் துகில்
அடல்பொலி ஏறுடை ஏகம்பம் மேய அடிகளுக்கே. ௬௩

அடிவலப் பாலது செந்தா மரையொத் ததிர்கழல்சூழ்ந்து
இடிகுரற் கூற்றின் எருத்திற வைத்த திளந்தளிரின்
அடியிடப் பாலது பஞ்சுற அஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்பமேய வரதருக்கே. ௬௪

தருக்கவற் றன்மிக்க முப்புரம் எய்தயன் றன்தலையை
நெருக்கவற் றோட மழுவாள் விசைத்தது நெற்கள்என்றும்
பருக்கவற் றுங்கச்சி ஏகம்பர் அத்தர்தம் பாம்புகளின்
திருக்கவற் றுலிட் டருளுங் கடகத் திருக்கரமே. ௬௫

கரத்தக் தமருகத் தோசை கடுத்தண்ட மீபிளப்ப
அரத்தக்த பாதம் நெரித்திட் டவனி தலம்நெரியத்
தரத்தக் திசைகளுக் கப்புறம் போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர் ஆடுயர் எல்லியும் மாநடமே. ௬௬

நடனம்பிரான்உகந் துய்யக்கொண்டான் என்றும் நன்மறையோர்
உடன்வந்து மூவாயிரவர் இறைஞ்சி நிறைந்த அன்பின்
கடனன்றி மற்றறி யாத்தில்லை அம்பலங் காளத்தியாம்
இடம்எம் பிரான்கச்சி ஏகம்பமேயாற் கினியனவே. ௬௭

இனியவர் இன்னார் அவரையொப் பார்பிறர் என்னவொண்ணாத்
தனியவர் தையல் உடனும் உருவர் அறம்பணித்த
முனியவர் என்றும் உகந்தமுக் கண்ணவர் சண்டி யன்புக்கு
இனியவர் காய்மழு வாட்படை யார்கச்சி ஏகம்பரே. சஅ

[தலைவனைக்கண்டு மையல்கொண்டாள் கூறியது]

பரவித் தனைநினை யக்கச்சி யேகம்பர் பண்ணும்மையல்
வரவித் தனையுள்ள தெங்கறிந் தேன்முன் அவர்மகனார்
புரவித் தனையடிக் கக்கொடி தாய்விடி யாஇரவில்
அரவித் தனையுங்கொண் டார்மட வார்முன்றில் ஆட்டிடவே. சகூ

இடவம் சுறுக்கெனப் பாயும்அஞ் சென்னி நகுதலைகண்டு
இடஅஞ் சுவர்மட வார்இரி கின்றனர் ஏகம்பத்தீர்
படம்அஞ்சு வாயது நாகம் இரைக்கும் அதனுக்குமுற்
படஅஞ் சுவர்எங்ங னேபலி வந்திடும் பாங்குகளே. ருo

[தலைவனைக்கண்டு மையல்கொண்டு வருந்தினாள் கூறியது.]

பாங்குடைக் கோள்புலி யின்அதள் கொண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள வந்தீர் தடங்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி ஏகம்பங் கோயில்கொண்டீர்
ஈங்கிடை கொள்ளக் கலைகொள்ள வந்தீர் இடைக்குமின்றே ருக

[இறைவன் உலாவருதலைக் கண்ட தோழியருள் ஒருத்தி மற்றொருத்திக்குக் கூறியது.]

இடைக்குமின் தோற்கும் இணைமுலையாய்முதியார்கள்தஞ்சொல்
கடைக்கண்ணன் றாங்கச்சி ஏகம்பர் ஐயங் கொளக்கடவும்
விடைக்குமுன் தோற்றநில் லேல்நின் றினிஇந்த மொய்குழலார்
கிடைக்குமுன் தோற்றநஞ் சங்கிது ஓதங் கிறித்துவமே. ருஉ

[இறைவன் உலாவைக் கண்டாளது நிலைமை கூறியது.]

கிறிபல பேசிச் சதிரால் நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி ஏகம்பர் ஐயங்கொள்ள
நெறிபல வார்குழ லார்மெலி வுற்ற நெடுந்தெருவில்
செறிபல வெள்வளை போயின தாயர்கள் தேடுவரே. ருங

[தோழி, தலைவியது இளமை கூறி மறுத்தல்.]

தேடுற் றிலகள்ளம் நோக்கந் தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை பொடித்தில கூறுமிவள்
மாடுற் றிலமணி யின்மட அல்குலும் மற்றிவள்பால்
நாடுற் றிலஎழில் எகம்ப னூர்க்குள்ளம் நல்கிடத்தே. ௫௪

நல்கும் புகழ்க்கடவூர்நன் மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங் கூற்றம் குளிர்திரைகள்
மல்குந் திருமறைக் காட்டமிர் தென்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி எகம்பம் மேவிய பொன்மலையே. ௫௫

மலையத் தகத்தியன் அர்ச்சிக்க மன்னி வடகயிலை
நிலையத் தமரர் தொழஇருந் தான்நெடு மேருஎன்னும்
சிலைஅத்தன் பைம்பொன் மதில்திரு எகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு வையாற்று அருமணியே. ௫௬

மணியார் அருவித் தடவி மயங்குடக் கொல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த சிராமலை ஐவனங்கள்
அணியார் அருவி கவர்கிளி ஓப்பும்இன் சாரல்விந்தம்
பணிவார் அருவினை தீர்க்கும் எகம்பர் பருப்பதமே. ௫௭

பருப்பதங் கார்தவழ் மந்தரம் இந்திர நீலம்வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங் கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்பதங் காகுதி நாறும்ம கேந்திரம் என்றிவற்றில்
இருப்பதங் காவுகந் தான்கச்சி எகம்பத் தெம்இறையே. ௫௮

இறைத்தார் புரமெய்த வில்லிமை நல்லிம வான்மகட்கு [குன்றம்
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றஞ் செங்குன்றம் மன்னற்
நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக் குன்றம்என் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் எகம்பர் குன்றென்று கூறுமினே. ௫௯

கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த் தானந் துருத்திஅம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத் தோணி புரம்பழனம்
ஆறுமின் போல்சடை வைத்தவன் ஆரூர் இடைமருதென்று
எறுமின் நீரெம் பிரான்கச்சி எகம்பம் முன்னினந்தே. ௬0

நினைவார்க் கருளும் பிரான்திருச் சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புரம்பியம் பூவணம்நீர்
பனைவார் பொழில்திரு வெண்காடு பாச்சில் அதிகைஎன்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி ஏகம்பம் நண்ணுமினே. ௯௧

நண்ணிப் பரவுந் திருவா வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணிற் பொலிகடம் பூர்கடம் பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை ஏர்கொள் எதிர்கொள்பாடி
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி ஏகம்பங் காண்மின் சென்றே.

சென்றேறி விண்ணுறும் அண்ணா மலைதிகழ் வல்லம்மென்பூ
இன்தேறல் பாய்திரு மாற்பேறு பாசூர் எழில்அழுந்தூர்
வன்தேர வன்திரு விற்பெரும் பேறு மதில்ஒற்றியூர்
நின்றோர் தருகச்சி ஏகம்பம் மேயார் நிலாவியவே. ௯௩

நிலாவு புகழ்த்திரு வோத்தூர் திருஆமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம் வில்வலம் கொச்சைதொண்டர்
குலாவுந் திருப்பனங் காடுநன் மாகறல் கூற்றம்வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி ஏகம்பர் ஆலயமே. ௯௪

ஆலயங் கார்கரு காவைகச் சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி யூர்திரு ஊறல்மிக்க
சோலையங் கார்திருப் போந்தைமுக் கோணந் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு ஆலங்கா டேகம்பம் வாழ்த்துமினே. ௯௫

**[செவிலி உடன்போனதலைவியது மென்மை நினைந்துவருந்தியது.]**

வாழப் பெரிதெமக் கின்னருள் செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர் தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுரம் ஆற்றா தளிரடி பூங்குழல்எம்
ஏழைக் கிடையிறக் குங்குய பாரம் இயக்குறினே. ௯௬

**[நெறியருமை கூறியாற்குத் தலைவியது அன்புகூறி உடன் கொண்டுசெல்க என்று தோழி கூறியது.]**

உறுகின்ற வெவ்வழல் அக்கடம் இக்கொடிக்கு உன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னாலைய பேரருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற் கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந் தண்பணை என்றுகொளே. ௯௭

[நற்றாய் வருந்திக் கூறியது.]

கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி தீச்சில வேயுலர்ந்து
விள்ளும் வெடிபடும் பாலைஎன் பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுள்திரு ஏகம்பர் சேவடியை
உள்ளும் அதுமறந் தாரெனப் போவ துரைப்பரிதே. ௬௮

[தலைமகன் தனது வலிமையைக் கூறி அஞ்சேல் என்றது.]

பரிப்பருந் திண்மைப் படையது கான ரெனிற்சிறகு [மேல்
விரிப்பருந் துக்கிரை யாக்கும்வெய் யோன்அஞ்சல் செஞ்சடை
தரிப்பருந் திண்கங்கை யார்திரு ஏகம்பம் அன்னபொன்னே
வரிப்பருந் திண்சிலை யேயும ராயின் மறைகுவனே. ௬௯

[நற்றாய் பிரிவாற்றாமையால் தன் நெஞ்சொடு கூறியது.]

வனவரித் திண்புலி யின்அதள் ஏகம்ப மன்னருளே
எனவரு பொன்னணங் கென்னணங் கிற்கென் எழிற்கழங்கும்
தனவரிப் பந்துங் கொடுத்தெனைப் புல்லியும் இற்பிரிந்தே
இனவரிக் கல்லதர் செல்வதெங் கேஒல்கும் ஏழைநெஞ்சே. ௭௦

[செவிலி சுவடுகண்டு வருந்திக் கூறியது.]

நெஞ்சார் தரஇன்பஞ் செய்கழல் ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை யாங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்செல முன்செல வெடுவெடென்ற
அஞ்சா அடுதிறற் காளைதன் போக்கிவை அந்தத்திலே. ௭௧

[செவிலி கதிரவனை வேண்டல்.]

இலவெங் கானனை அல்லால் தொழுஞ்சாண் ஏகம்பனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவ னேதண் மலர்மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத் தளிரடி செல்சுரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள் செய்யுன் உறுதுணைக்கே. ௭௨

[செவிலி புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாதல்.]

துணையொத்த கோவையும் போலெழிற் பேதையுந் தோன்றலும்முன்
இணையொத்த கொங்கையொ டேயொத்த காதலொ டேகினரே
அணையத்தகா எருத்த காளையைக் கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னொடும் பேசுமினே.

[தோழி தலைமகளது வரவு கூறி செவிலியது போக்கை மறுத்துக் கூறியது.]

மின்நலிக் கும்வணக் கத்திடை யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்தின ரேல்எம் மனையிற்கண்டீர
பின்னரிப் போக்கரும் குன்று கடந்தவர் இன்றுகம்பர்
மன்அரி தேர்ந்து தொழுங்கச்சி நாட்டிடை வைகுவரே. ௭௪

[மீண்டுவரும் தலைமகன் தலைவிக்கு நகரணிமை கூறியது.]

உவரச்சொல் வேடுடைக் காடுகந் தாடிய ஏகம்பனார்
அவரக்கன் போன விமானத்தை ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயஞ் சூலந் துலங்குவிண்மேல்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி காணினுங் கார்மயிலே. ௭௫

[தலைவன் நகர்வளங்கூறி அணிமை கூறியது.]

கார்மிக்க கண்டத் தெழில்திரு ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு வோர்ஒலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர் ஒலிகருப் பாலைஒலி
நீர்மிக்க மாக்கட லின்ஒலி யேஒக்கும் நேரிழையே. ௭௬

[தலைவன் பொழில் மேம்பாடு கூறி தளர்வு அகன்றாம் என்றல்.]

நேர்த்தமை யாமை விறற்கொடு வேடர் நெடுஞ்சரத்தைப்
பார்த்தமை யாலிமை தீந்தகண் பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யாலுமை நோக்கருங் கம்பர்கச் சிப்பொழிலுள்
சேர்த்தமை யாலிமைப் போதணி சீதஞ் சிறந்தனவே. ௭௭

[தலைமகன் தன் நகர்வளங் காட்டல்.]

சிறைவண்டு பாடுங் கமலக் கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின் பொழிலிவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புவை புன்சடை ஏகம்பனார்
நறைகொண்ட பூங்கச்சி நாடெங்கும் இவ்வண்ணம் நன்னுதலே

[இதுவுமது.]

நன்னுத லார்கருங் கண்ணுஞ்செவ் வாயும்இவ் வாறெனப்போய்
மன்னித ழார்திரு நீலமும் ஆம்பலும் பூப்பவள்ளை
என்னவெலாம்ஒப்புக் காதென்று வீறிடும் ஏகம்பனார்
பொன்னுத லார்விழி யார்கச்சி நாட்டுளிப் பொய்கையுளே.

[இதுவுமது.]

உள்வார் குளிர நெருங்கிக் கடுங்கிடங் கிட்டநன்னீர்
வள்வா ளைகளொடு செங்கயல் மேய்கின்ற எங்களையாட்
கொள்வார் பிறவி கொடாத ஏகம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டெழில் ஏரி களப்பரப்பே. ௮௰

[இதுவுமது.]

பரப்பார் விசும்பிற் படிந்த கருமுகி லன்னநன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்பொடு சேம்படர் தண்பணைவாய்ச்
சுரப்பார் எருமை மலர்தின்னத் துன்னுக ராவொருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக் கம்பர்தம் பூங்கச்சியே.

[இதுவுமது.]

கச்சார் முலைமலை மங்கைகண் ணாரஎண் ணான்கறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர் தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற விமானமுந் தன்மம்அறா
அச்சா லையும்பரப் பாங்கணி மாடங்கள் ஓங்கினவே. ௮௨

[இதுவுமது.]

ஓங்கின ஊரகம் உள்ளகம் உம்பர் உருகிடமாம்
பாங்கினில் நின்ற தரியுறை பாடகம் தெய்இரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர் மைத்துனி வான்கவிகள்
தாங்கின நாட்டிருந் தாளது தன்மனை ஆயிழையே. ௮௩

[இதுவுமது.]

இழையார் அரவணி ஏகம்பர் நெற்றி விழியின்வந்த
பிழையா அருள்நம் பிராட்டிய தின்ன பிறங்கல்உன்னும்
நுழையா வருதிரி சூலத்தன் நோக்கரும் பொன்கடுக்கைத்
தழையார் பொழில்உது பொன்னே நமக்குத் தளர்வில்லையே.

[தலைமகன் தன் நகர் இதுவே எனக்கூறியது.]

தளரா மிகுவெள்ளங் கண்டுமை யோடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும் எங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம் மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்மட வாய்இவ் வுலகத்துள்ளே. ௮௫

**[கார்காலங் கண்டு வருந்திய தலைவி கூறியது.]**

உலவிய மின்வடம் வீசி உருமதிர் வுள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில் யானைகள் வானில்வந்தால்
சுலவிய வார்குழல் பின்னரென் பாரி ரெனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற் கொடியன்ன நீர்மையனே. ௮௬

**[வினைமுற்றி மீளுந் தலைமகன் காரை நோக்கிக் கூறியது]**

நீரென்னி லும்அழுங் கண்முகில் சாள்நெஞ்சம் அஞ்சலையென்று
ஆரென்னி லுந்தம ராயுரைப் பார்அம ராவதிக்கு
நேரென்னி லுந்தருங் கச்சியுள் ஏகம்பர் நீள்மதில்வாய்ச்
சேரென்னி லுந்தங்கும் வாட்கண்ணி தானன்பர் தேர்வரவே.

**[தோழி, கார்கண்டு தலைவர் வருவர், வருந்தாதொழிக என்றது.]**

வரங்கொண் டிமையோர் நலங்கொள்ளும் ஏகம்பர் கச்சியன்னாய் [னே
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம் அன்பர்தந்தேரின்முன் [த்தின்
தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன் ஆகத்தண் காந்தள்கொ
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும் போந்தன கார்முகிலே. ௮௮

**[தலைவி கார்கண்டு துணைவயின் பிரிந்தார் வந்திலர் என்று வருந்திக் கூறியது]**

கார்முகம் ஆரவண் கைக்கொண்ட கம்பர் கழல்தொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென் றார்நினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல் நீந்துதும் அயர்வுயிர்ப்பே. ௮௯

**[தலைமகனது தேர்வரவை அறிந்த தலைவி மகிழ்ந்து கூறியது]**

உயிரா யினஅன்பர் தேர்வரக் கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம் பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யொடும் ஆடிய ஏகம்பர் தம்அருள்போல்
கையிரா வளையழுந் தக்கச் சிறுத்தன கார்மயிலே. ௯௰

**[தோழி ஏறுகோள்கூறி வரைவு கடாதல்]**

கார்விடை வண்ணத்தன் அன்றேழ் தழுவினும் இன்றுதனிப்
போர்விடை பெற்றெதிர் மாண்டா ரெனஅண்டர் போதவிட்டார்
தார்விடை ஏகம்பர் கச்சிப் புறவிடை தம்பொன்நன்பூண்
மார்விடை வைகல் பெறுவார் தழுவ மழவிடையே. ௯௧

[தோழி பிறர்வரைய முயலுதலைக்கூறி வரைவு கடாயது.]

விடைபாய் கொடுமைஎண் ணேதுமே லாங்கன்னி வேற்கருங்கண்
கடைபாய் மனத்திளங் காளையர் புல்கொலி கம்பர்கச்சி
மடைபாய் வயல்இள முல்லையின் மான்கன்றொ டான்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றிற் கடல்போற் கலந்தெழுமே. ௯௨

[தலைமகன் பாங்கனுக்கு இயலிடங் கூறுதல்.]

எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர் கச்சி இருங்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணற் குன்றிற் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பின் ஓரிரண் டாலும் முகத்தனவே. ௯௩

[தோழி தலைவியை நோக்கிக் கூறியது.]

முகம்பாகம் பண்டமும் பாகம்என் றோதிய மூதுரையை
உகம்பார்த் திரேல்என் நலமுய ரேகம்பர் கச்சிமுன்னீர்
அகம்பாக ஆர்வின் அளவில்லை என்னின் பவளச்செவ்வாய்
நகம்பால் பொழில்பெற்ற நாமுற்ற வர்கொள்க நன்மயலே. ௯௪

[தோழி ஏதங் கூறி இரவுக்குறி மறுத்தல்.]

மயக்கத்த நல்லிருள் கொல்லுஞ் சுறவொ டெறிமகரம்
இயக்கத் திடுசுழி ஓதங் கழிகிளர் அக்கழித்தார்
துயக்கத் தவர்க்கரு ளாக்கம்பர் கச்சிக் கடலபொன்னூல்
முயக்கத் தகல்வு பொருள்கொண்க நீர்வரும் ஊர்க்கஞ்சுமே.

[தலைமகனைப் பிரிந்து நின்ற தலைவி கடலை நோக்கி
வருந்திக்கூறியது.]

மேயிரை வைக்க குருகுண ராமது உண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்பு கடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகங்கொண் டோன்தொழுங் கம்பர்கச் சிப்பவ்வநீர்
தாயிரை கானல்மற் றூரறி வார்நந் துறைவர்பொய்யே. ௯௬

[தோழி தலைமகட்குத் தேர் வரவு கூறியது.]

பொய்வரும் நெஞ்சினர் வஞ்சனை யாரையும் போகவிடா
மெய்வரும் பேரருள் ஏகம்பர் கக்சி விரையினவாய்க்
கைவரும் புள்ளொடு சங்கினம் ஆர்ப்பநம் சேர்ப்பர்திண்டேர்
அய்வரு தீமங் களினம்வந் தார்ப்ப அணைகின்றதே. ௯௭

இன்றுசெய் வோம்இத னில்திரு ஏகம்பர்க் கெத்தனையும்
நன்றுசெய் வோம்பணி நாளைஎன் றுள்ளிநெஞ் சேயுடலில்
சென்றுசெ யாரை விடுந்துணை நாளும் விடாதடிமை
நின்றுசெய் வாரவர் தங்களின் நீள்நெறி காட்டுவரே. ௯௮

காட்டிவைத் தார்தம்மை யாம்கடிப் பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர் ஏதுமி லாதஎம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு வாமவர் பாதங்களே. ௯௯

பாதம் பரவியோர் பித்துப் பிதற்றினும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள் ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாமெனக் கொள்வர்மெய்த்
தொண்டரே. ௱

திருச்சிற்றம்பலம்

---

# ௫. திருவொற்றியூர் ஒருபா ஒருபது

இருநில மடந்தை இயல்பினில் உடுத்த
பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த
ஒற்றி மாநகர் உடையோய் உருவின்
பெற்றியொன் றாகப் பெற்றோர் யாரே
மின்னின் பிறக்கந் துன்னும்நின் சடையே *

மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
பாவகன் பரிதி பனிமதி தன்னொடும்
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ணொளி ஆரந் தாரா கணமே
விண்ணவர் முதலா வேஃறோர் இடமாக்

கொண்டுறை விசும்பே கோலநின் ஆகம்
எண்திசை திண்தோள் இருங்கடல் உடையே
அணியுடை அல்குல் அவனிமண் டலமே
மணிமுடிப் பாந்தள்நின் தாளிணை வழக்கே
ஒழியா தோடிய மாருதம் உயிர்ப்பே

வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில் ஞானத் தொகுதிநின் உணர்வே
நெருங்கிய உலகினில் நீர்மையும் நிற்றலும்
சுருங்கலும் விரிதலுந் தோற்றநின் தொழிலே

அமைத்தலும் அழித்தலும் ஆங்கதன் முயற்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே
என்றிவை முதலா இயல்புடை வடிவினோடு
ஒன்றிய துப்புரு இருவகை யாகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி

(பாடம்) *மின்னிய மின்னின் பிறக்க நின் கடையே.

அத்திறத் தைம்பொறி அறுவகைச் சமயமோடு
ஏழுல காகி எண்வகை மூர்த்தியோடு
ஊழிதோ றூழி எண்ணிறந் தோங்கி
எவ்வகை யளவினிற் கூடிநின்று
அவ்வகைப் பொருளும்நீ யாகிய இடத்தே. க

இடத்துறை மாதரோ டொருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்

திருஅமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றுந் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்

இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வகை யாகி
அடை பற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே. உ

உருவாம் உலகுக் கொருவ னாகிய
பெரியோய் வடிவின் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனில்
அப்பொரு ளுனக்கே அவயவ மாதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி யூட்டித்

தொண்ணீர் வையகந் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்

திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்தவை நின்செய லாதலின்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யூர
பகர்வோர் நினக்கு வேறின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழின் அல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே. ௩

பொருளுணர்ந் தோங்கிய பூமகள் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கும் மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினுந் திறலினுஞ் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியாது
ஒவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை யாகியும்
பெருகியுஞ் சுருங்கியும் பெயர்ந்துந் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கம்
ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்னருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே. ௪

மயக்கமில் சொல்நீ யாயினும் மற்றவை
துயக்க நின்திறம் அறியாச் சூழலும்
உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது
கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகினிற் செய்வோய் எனினும்
அவ்வினைப் பயன்நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநிற் பணிவோர்
மனத்திடை வாரி யாகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க் கணிமையும் அல்லவர்ச்
சேய்மையும் நாள்தொறும்

என்பினை உருக்கும் இயற்கைய ஆதலின்
கண்டவர் தமக்கே ஊனுடல் கழிதல்
உண்டென உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவ ௫
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே.

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யானென அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதுஅவள் அவன்என நின்றமை யார்க்கும்
பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது மூத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நான்என நவிற்று மாறே
மூவிலை ஒருதாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யான்என மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யான்என உணர்த்திய வாறே
நிலநீர் தீவளி உயர்வான் என்றும்
உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருளுநற் பூதப் படையோய் என்றும்
தெருளநின்று உலகினில் தெருட்டு மாறே
ஈங்கிவை முதலாம் வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத்
தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வண்மையிற் சுழலும் மாந்தர்க்கு
ஆதி யாகிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தஞ் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகப்படும் அளவே. ௬

அளவினில் இறந்த பெருமையை யாயினும்
எனதுளம் அகலா தொடுங்கிநின் றனையே
மெய்யினை இறந்த மெய்யினை யாயினும்
வையகம் முழுதும்நின் வடிவெனப் படுமே
கைவலத் திலைநீ எனினுங் காதல்
செய்வோர் வேண்டுஞ் சிறப்பொழி யாயே
சொல்லிய வகையால் துணையலை யாயினும்
நல்லுயிர்க் கூட்ட நாயகன் நீயே
எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே, அஃதான்று
பிறவாப் பிறவியை பெருகாப் பெருமையை
துறவாத் துறவியை தொடராத் தொடர்ச்சியை
நுகரா நுகர்ச்சியை நுணுகா நுணுக்கினை
அகலா அகற்சியை அணுகா அணிமையை
செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை
வெய்யை தணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை
ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி
எனைய வாகிய எண்ணில் பல்குணம்
நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்கு கடலுடுத்த ஒற்றி யூர
ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅஞ்
சொல் நிலை சுருங்கின் அல்லது
நின்இயல் அறிவோர் யார்இரு நிலத்தே. எ

நிலத்திடைப் பொறையாய் அவாவினின் நீண்டு
சொலத்தகு பெருமைத் தூரா ஆக்கை
மெய்வளி ஐயொடு பித்தொன் றாக
ஐவகை நெடுங்காற் றாங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்பத்

திரையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் அரவக் கூட்டம்வந் தொலிப்ப
ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகஞ் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
முழக்குடைத் துளையே முகங்க ளாக
வழுக்குடை மூக்கா றேதம்வந் தொலிப்ப
இப்பரி சியற்றிய உடலிருங் கடலுள்
துப்புர வென்னுஞ் சுழித்தலைப் பட்டிங்கு
ஆவா என்றுநின் அருளினைப் பெற்றவர்
நாவா யாகிய நாதநின் பாதம்
முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித் தார்த்துப்
பெருகிய நிறையெனுங் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்கயி றறுத்து
மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
கருமப் பாரெனுங் கடுவெளி எற்ற
தூமச் சோதிச் சுடர்க்குற நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
நெருங்கா அளவில் நீள்கரை எற்ற
வங்க யாத்திரை போக்குதி போலும்
ஓங்கு கடலுடுத்த ஒற்றியூ ரோயே. அ

ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி யாரப் பரவுதல் பொருட்டா
என்னிடைப் பிறந்த இன்னாப் புன்மொழி
நின்னிடை அணுகா நீர்மைய ஆதலின்
ஆவலித் தழுதலில் அகன்ற அம்மனை

கேவலஞ் சேய்மையிற் கேளாள் ஆயினும்
பிறித்தற் கரிய பெற்றிய தாகிக்
குறைவினில் ஆர்த்துங் குழவிய தியல்பினை
அறியா தெண்ணில் ஊழிப் பிறவியின்
மயங்கிக் கண்ணிலர் கண்பெற் றாங்கே

தாய்தலைப் படநின் தாளிணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்
கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது

என்தனை யாயினும் யான்அவிழ்க் கறியேன்
துன்னிடை இருளெனுந் தூற்றிடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையுந் தாயுஞ் சாதியும் அறிவுநம்
சிந்தையுந் திருவுஞ் செல்கதித் திறனும்

துன்பமுந் துறவுந் தூய்மையும் அறிவும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்
சுவைஒளி ஊறோசை நாற்றந் தோற்றம்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்
ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து

நின்றனன் தமியேன் நின்னடி அல்லது
சார்வுமற் றின்மையில் தளர்ந்தோர் காட்சிச்
சேர்விட மதனைத் திறப்பட நாடி
எய்துதற் கரியோய் யான்இனிச்
செய்வதும் அறிவனோ தெரியுங் காலே.

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்று மாகிய முதல்வ போற்றி
அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி

இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வஞ் செய்பவர்க் கணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை யமிர்தமாய் நயந்தோய் போற்றி

விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காணா முன்பொருள் கருத்துறை செம்மைக்கு
ஆணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென் றிவைகுணம் உடைமையில்

பெண்ணொ டாணெனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்
தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி

சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றனை
நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற் குரியோர் யார்இரு நிலத்தே. ம

## பதினோராந் திருமுறையிற்

கண்ட பாடல்கள்

முற்றும்.

# பிற பாடல்கள்

## க. கோயில் திருவகவல்

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலகைத் தேரின் அலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க

பிறந்தன இறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும் மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்

அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன உவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன

தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை

இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்
புற்புதக் குரம்பை துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்

பீளையும் நீரும் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியும் நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர்க் கோழை யொழுகு மொருபொறி
வளியும் மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகஇன் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற இருவினை மலமற
வரவொடு செலவற மருளற இருளற
இரவொடு பகலற இகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுள் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொன் னம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே.

---

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடும்
காதலுங் கருத்துமல் லால்நின் னிருதாள்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து
அங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட்டு அலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்

வாதபித் தங்கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊற்றைப் புன்தோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்கும் காணப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை
ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக் கழகே. உ.

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுள்நின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் தலைபறித்து
இடக்கையி லடக்கிய இறைவநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியன்நின் னடைக்கலம்
மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழுக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தலைந்ததில் உலைந்திடும்
நிணவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்கா றவாவுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
இகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய யாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் துருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடுபம் பரத்தைக்

காசிற் பணத்திற் சுழலுங்காற் றூடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழும்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியாய் யடைக்கல மடைக்கலம்
மறைவர் தில்லை மன்றுள்நின் றூடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவரும் முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மான்நின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே. ௫

---

## உ. கச்சித் திருவகவல்

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியும் மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லும் முயன்று நடக்கும்

உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென இயம்பியும்
நெடுமுடல் தாங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க்கு உரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியும் நின்றுநின் றொழுகும்
கூறிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்

தக்க தலையோட் டின்முளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரள்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கும் மறைவிடம்
நச்சிக் காமுக நாய்தா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் திருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடைவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே. க.

## ௩. திருவேகம்பமாலை

[கட்டளைக்கலித்துறை]

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்று
இறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே. க

கட்டி யணைத்திடும் பெண்டீரும் மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டி யடிவைப்ப ரோவிறை வாகச்சி யேகம்பனே. உ

கைப்பிடி நாயகன் தூங்கையி லேயவன் கையையெடுத்
தப்புறந் தன்னி லசையாமல் முன்வைத் தயல்வளவில்
ஒப்புடன் சென்று துயில்நீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படி நான்நம்பு வேனிறை வாகச்சி யேகம்பனே. ௩

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினால்
தன்னாலு மாடிச் சலித்திடு மோவந்தத் தன்மையைப்போல்
உன்னாலி யானுந் திரிவதல் லால்மற் றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண் டோவிறை வாகச்சி யேகம்பனே. ௪

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே. ௫

பொல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கள்தமை
வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பால்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் றிருவடிக்கன்
பில்லா தவன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே. ௬

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே. எ

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தால்
சொன்ன விசாரந் தொலையா விசாரம்நற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்ன விசாரம்வைத் தாயிறை வாகச்சி யேகம்பனே. அ

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. கூ

மாயநட் டோரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயைமறந்
தேயும தேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே. ௰

வரிக்கோல வேல்விழி யாரநு ராக மயக்கிற்சென்று
சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ்சொ லேன்தமி யேனுடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ விரையெதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே. கக

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெ
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட [திரே
தூதென்றெண் ணாமற் சுகமென்று நாடுமித் துர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைப் பேனிறை வாகச்சி யேகம்பனே. க௨

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங்கச்சி யேகம்பனே. க௩

சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறும் முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினால்
பீறும் மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டி லேனிறை வாகச்சி யேகம்பனே. கச

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தருங்கச்சி யேகம்பனே. கரு

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின் றூர்துறந் தோர்தமக்கு
இருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தில்
வருத்திக்கொண் டேனிருந் தாயிறை வாகச்சி யேகம்பனே. கசு

பொல்லா இருளகற் றுங்கதிர் கூகையென் புண்கண்ணினுக்கு
அல்லா யிருந்திடு மாறொக்கு மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டாய்
யெல்லாம் விழிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே. கஎ

வாதுக்குச் சண்டைக்குப் போவர் வருவார் வழக்குரைப்பர்
தீதுக் குதவியுஞ் செய்திடு வார்தினந் தேடியொன்று
மாதுக் கழித்து மயங்கிடு வார்விதி மாளுமட்டும்
ஏதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே. கஅ

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப கார்ஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே. ககூ

அப்பென் றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பால்
தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினால்
செப்பில பக்குவம் பக்குவ மாயுள்ள சீவனிலும்
இப்படி யேசிறப் பெனக்கை பிரான்கச்சி யேகம்பனே. உ௰

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டை யாடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
ஈயா மனிதரை என்படைத் தாய்கச்சி யேகம்பனே. உக

ஆற்றிற் கரைத்த புளியாக்கி டாமலென் னன்பையெல்லாம்
போற்றித் திருவுளம் பற்றுமை யாபுர மூன்றெரித்துக்
கூற்றைப் பணிகொளுந் தாளுடை யாய்குன்ற வில்லுடையாய்
ஏற்றுக் கொடியுடை யாயிறை வாகச்சி யேகம்பனே. உஉ

பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப் பொருள்பறிக்க
எண்ணாது உனைமறந் தேனிறை வாகச்சி யேகம்பனே. உங

நாவார வேண்டும் விதஞ்சொல்லு வாருனை நான்பிரிந்தால்
சாவேனென் றேயிருந் தொக்கஉண் பார்கள்கை தான்வறண்
போய்வாரு மென்று நடுதலைக் கேகுட்டும் பூவையருக் [டால்
கீவார் தலைவிதி யோவிறை வாகச்சி யேகம்பனே. உச

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலும்மெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொ டார்குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னாமம் நினைவிற்சற்றும்
இல்லா ரிருந்தென் இறந்தென் புகல்கச்சி யேகம்பனே. உரு

வானமு தத்தின் சுவையறி யாதவர் வண்கனியின்
தானமு தத்தின் சுவையெண்ணல் போலத் தனித்தனியே
தேனமு தத்தின் தெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமு தச்சுவை நன்றல்ல வோகச்சி யேகம்பனே. உசு

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
எற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே. உஎ

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினைப் பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் ஆயவும்மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. ௨௮

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை யோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக் கேசெயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப் பாயிறை வாகச்சி யேகம்பனே. ௨௯

பிறந்துமண் மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேல்மய லாகிப்புன் மாதருக்குள்
பறந்துழன் றேதடு மாறிப்பொன் தேடியப் பாவையர்க்கீந்
திறந்திட வோபணித் தாய்இறை வாகச்சி யேகம்பனே. ௩௰

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சார்ஐம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முன்அற்றுக்
காதங் கரணங் களுமற்ற ஆனந்தக் காட்சியிலே
ஏதங் களைந்திருப் பேன்இறை வாகச்சி யேகம்பனே. ௩௧

நல்லாய் எனக்கு மனுஒன்று தந்தருள் ஞானமிலாப்
பொல்லா எனைக்கொன்று போடும் பொழுதியல் பூசைசெபஞ்
சொல்லார்நற் கோயில் நியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லாம் முடிந்தபின் கொல்லுகண் டாய்கச்சி யேகம்பனே. ௩௨

சடக்கடத் துக்கிரை தேடிப் பலஉயிர் தம்மைக்கொன்று
விடக்கடித் துக்கொண் டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்கள் தமைக்கரம் பற்றிநமன்
இடக்கடிக் கும்பொழு தேதுசெய் வார்கச்சி யேகம்பனே. ௩௩

நாறு முடலை நரிப்பொதி சோற்றினை நான்தினமும்
சோறுங் கறியும் நிரப்பிய பாண்டத்தைத் தோகையர்தம்
கூறும் மலமும் இரத்தமுஞ் சோருங் குழியில்விழா
தேறும் படிஅருள் வாய்இறை வாகச்சி யேகம்பனே. ௩௪

சொக்கிட் டரமனைப் புக்குள் திருடிய துட்டர் வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பது போற்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கமம் நிந்தித்து வீடிச்சிக்கும்
எக்குப் பெருத்தவர்க் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே. ௧௫

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்னம் மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின் நாமத்தைப் போற்றிநித்தம்
அருந்தா முலைபங்கர் என்றோத பாதகர் அம்புவியில்
இருந்தாவ தேதுகண் டாய்இறை வாகச்சி யேகம்பனே. ௧௬

எல்லாம் அறிந்து படித்தே இருந்தெமக் குள்ளபடி
வல்லான் அறிந்துளன் என்றுண ராது மதிமயங்கிச்
சொல்லால் மலைந்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்பின்
எல்லாஞ் சிவன்செய லேஎன்பர் காண்கச்சி யேகம்பனே. ௧௭

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவாய் உருகுவர் தாரணியில்
உன்னை நினைந்திங் குனைப்பூசி யாத உலுத்தரெல்லாம்
என்னை இருந்துகண் டாய்இறை வாகச்சி யேகம்பனே. ௧௮

கடுஞ்சொல்லின் வம்பரை ஈனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பவ மேசெய்யும் நிர்மூடர் தம்மைக் குவலயத்துள்
நெடும்பனை போல வளர்ந்துநல் லோர்தம் நெறியறியா
இடும்பரை என்வகுத் தாய்இறை வாகச்சி யேகம்பனே. ௧௯

கொன்றேன் அநேகம் உயிரைஎல் லாம்பின்பு கொன்றுகொன்று
தின்றேன் அதன்றியுந் தீங்குசெய் தேனது தீர்கஎன்றே
நின்றேன்நின் சந்நிதிக் கேஅதனால் குற்றம் நீபொறுப்பாய்
என்றேஉனை நம்பி னேன்இறை வாகச்சி யேகம்பனே. ௨௰

## திருஏகம்ப விருத்தம்

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
மூட னாய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என்செய் வேன்கச்சி ஏகம்ப நாதனே. சக

---

## ௪ திருத்தில்லை

[கட்டளைக்கலித்துறை]

காம்பிணங் கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்கும்
தாம்பிணங் கும்பல ஆசையும் விட்டுத் தனித்துச்செத்துப்
போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப் புரண்டினிமேல்
சாம்பிணங் கத்துதை யோஎன்செய் வேன்தில்லைச் சங்கரனே. க

சோறிடும் நாடு துணிதருங் குப்பைதொண் டன்பரைக்கண்
டேறிடுங் கைகள் இறங்கிடுந் தீவினை எப்பொழுதும்
நீறிடும் மேனியர் சிற்றம் பலவர் நிருத்தங்கண்டால்
ஊறிடும் கண்கள் உருகிடும் நெஞ்சம்என் உள்ளமுமே. உ

அழலுக்குள் வெண்ணெய் எனவே உருகிப்பொன் அம்பலத்தார்
நிழலுக்குள் நின்று தவமுஞற் ருமல்நிட் டூரமின்னார்
குழலுக் கிசைந்த வகைமாலை கொண்டுகுற் றேவல்செய்து
விழலுக்கு மூத்தலை இட்டிரைத் தேனென் விதிவசமே. ௩

ஓடாமல் பாழுக் குழியாமல் ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம் விடாமல்வெங் கோபம்நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல் இன்றைக்கு நாளைக்கென்று
தேடாமல் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. ௪

பாராமல் ஏற்பவர்க் கில்லையென் னாமல் பழுதுசொல்லி
வாராமல் பாவங்கள் வந்தணு காமல் மனம்அயர்ந்து
பேராமல் சேவை பிரியாமல் அன்பு பெறாதவரைச்
சேராமல் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. ரு

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் குத்திரங் கோள்களவு
கல்லாமல் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. சு

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவில்ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே. எ

காலை உபாதி மலஞ்சல மாம்அன்றிக் கட்டுச்சியிற்
சால உபாதி பசிதாகம் ஆகும்முன் சஞ்சிதமாம்
மாலை உபாதி துயில்காம மாம்இவை மாற்றிவிட்டே
ஆலம் உகந்தருள் அம்பலவா என்னை ஆண்டருளே. அ

ஆயும் புகழ்த்தில்லை அம்பல வாணர் அருகில்சென்றால்
பாயும் இடபங் கடிக்கும் அரவம்பின் பற்றிச்சென்றால்
பேயுங் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்தொடரும்
போய்என்செய் வாய்மன மேபிணக் காடவர் போம்இடமே. கூ

ஓடும் எடுத்ததன் ஆடையுஞ் சுற்றி உலாவிமெள்ள
வீடுகள் தோறும் பலிவாங்கி யேவிதி அற்றவர்போல்
ஆடும் அருட்கொண்டிங்கு அம்பலத் தேநிற்கும் ஆண்டி தன்னைத்
தேடுங் கணக்கென்ன காண்சிவ காம சவுந்தரியே. கய

ஊட்டுவிப் பானு முறக்குவிப் பானுமிங் கொன்றொடொன்றை
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினை
காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே. கக

அடியார்க் கெளியவ ரம்பல வாண ரடிபணிந்தால்
மடியாமற் செல்வ வரம்பெற லாம்வைய மேயளந்த
நெடியோனும் வேதனுங் காணாத நித்த நிமலனருள்
குடிகாணும் நாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே. கஉ

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டால்
பொய்வைத்த சொப்பன மாமன்னர் வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங் கேமண்ட லீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடக சாலையெங் கேயிது கண்மயக்கே. கங

உடுப்பானும் பாலன முண்பானு முய்வித் தொருவர்தம்மைக்
கெடுப்பானு மேதென்று கேள்விசெய் வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந் தேகியென் றேற்பானு மேற்கக் கொடாமல்நின்று
தடுப்பானும் நீயல்லை யோதில்லை யானந்தத் தாண்டவனே. கச

வித்தாரம் பேசினுஞ் சோங்கேறி னுங்கம்ப மீதிருந்து
தத்தாவென் றோதிப் பவுரிகொண் டாடினுந் தம்முன்றம்பி
ஒத்தாசை பேசினு மாவதுண் டோதில்லை யுண்ணிறைந்த
கத்தாவின் சொற்படி யல்லாது வேறில்லை கன்மங்களே. கரு

பிறவா திருக்க வரந்தரல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமலம்
மறவா திருமனமே யதுகாண்நன் மருந்து னக்கே. கசு

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞான கரனைப் புராந்தகனை
அவியா விளக்கைப்பொன் னம்பலத் தாடியை யைந்தெழுத்தால்
செவியாமல் நீசெவித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே. கஎ

நாவின் மறைப்பொரு ளம்பல வாணரை நம்பியவர்
பாவி லொருதரஞ் சேவிக்கொ ணாதிருப் பார்க்கருங்கல்
மேவி லெடுத்தவர் கைவிலங் கைத்தைப்பர் மீண்டுமொரு
காலில் நிறுத்துவர் கிட்டியுந் தாம்வந்து கட்டுவரே. கஅ

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தம்மைப்
போற்றா தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்தில்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே
ஏற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே. ௧௯

அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மை சிவகாம சுந்தரி நேசனையெம்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே. ௨௦

---

## திருச்செங்காடு

நெருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே
இருப்பார் திருவுள மெப்படி யோவின்ன மென்னையன்னைக்
கருப்பாசயக் குழிக்கே தள்ளு மோகண்ணன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி யாது சிவன்செயலே. ௧

---

## திருவொற்றியூர்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவல்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. ௧

சுடப்படு வாரரி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
திடப்படு மாமதில் தென்னொற்றி யூரன் நெருப்பரப்பில்
நடப்பவர் பொற்பதம் நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே. ௨

---

## திருவிடைமருதூர்

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
ஓடே யெடுத்தென்ன வுள்ளன்பி லாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே. க

தாயும் பகைகொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் செகமும்பகை
ஆயும் பொழுதி லருஞ்செல்வம் நீங்கிலிங் காதலினால்
தோயுநெஞ் சேமரு தீசர்பொற் பாதஞ் சுதந்தரமே. உ

---

## திருக்கழுக்குன்றம்

காடோ செடியோ கடற்புற மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பதமே. க

---

## திருக்காளத்தி

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே. க

பொன்னாற்பிர யோசனம் பொன்படைத் தார்க்குண்டு பொன் படைத்தோன்
தன்னாற்பிர யோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மை யைப்போல்
உன்னாற்பிர யோசனம் வேணதெல் லாமுண் டுனைப்பணியும்
என்னாற்பிர யோசன மேதுண்டு காளத்தி யீச்சுரனே. உ

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் நானினிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே. ௩

மூப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினால்
செப்போ திளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடும்
அப்போது கண்கலக் கப்பட வும்அமைத் தாயையனே
எப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீச்சுரனே. ௪

இரைக்கே யிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்துமின்னார்
அரைக்கே யவலக் குழியரு கேயசும் பார்ந்தொழுகும்
புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள் பொன்முகலிக்
கரைக்கே கல்லால் நிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே. ௫

நாறுங் குருதிச் சலதாரை தோற்புரை நாடொறுஞ்சீய்
ஊறும் மலக்குழி காமத் துவார மொளித்திடும்புண்
தேறுந் தசைப்பிளப் பந்தரங் கத்துள சிற்றின்பம்விட்டு
ஏறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீச்சுரனே. ௬

---

## கயிலாயம்

கான்சாயும் வெள்ளி மலைக்கர சேநின் கழல்நம்பினேன்
ஊன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய்கட வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாயவ ணைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே. ௧

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துதின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
அல்லும் பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே. ௨

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
அனந்தலி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. ௫

கையார வேற்றுநின் றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்துநின் சந்நிதிக் கேவந்து சந்ததமும்
மெய்யார நிற்பணிந் துள்ளே யுரோமம் விதிர்விதிர்ப்ப
ஐயாவென் றோல மிடுவதென் றோகயி லாயத்தனே. ௬

நீறார்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானமுற் றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடப்பதென் றோகயி லாயத்தனே. ௭

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தின்
எல்லையிற் புக்கிட வேகாந்த மாயெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. ௮

மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்தும்
சிந்திக்குஞ் சிந்தையை யானென்செய் வேனெனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போல்
எந்தைக் குரியவன் காணத்த னேகயி லாயத்தனே. ௯

வருந்தேன் பிறந்து மிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி லேன்புகழ் வாரிடத்தே
இருந்தே னினியவர் கூட்டம்வி டேனிய லஞ்செழுத்தாம்
அருந்தே னருந்துவ னின்னரு ளாற்கயி லாயத்தனே. ௰

---

## மதுரை

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனம்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேயலையக்
கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே. ௧

# பொது

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்கு
அடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்
பிறைக்கே. ௧

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ வொருவரு மிங்கில்லையே. ௨

நாடிக்கொண் டீசரை நாட்டமுற் றாயிலை நாதரடி
தேடிக்கொண் டாடித் தெளிந்தா யிலைசெக மாயைவந்து
மூடிக்கொண் டோமென்றுங் காமா யுதங்கள் முனிந்தவென்றும்
பீடிப்பை யோநெஞ்ச மேயுனைப் போலிலை பித்தர்களே. ௩

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே. ௪

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானுடமே. ௫

சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லிலு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடம்
கல்லிலுஞ் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே. ௬

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே. ௭

பட்டைக் கிழித்துப் பருஊசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழ லாள்கையில் முன்கொடுத்துக்
கட்டி யிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப் பிரியவென் றேவிங்ங னேசிவன் மீண்டதுவே. ௮

சூதுற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற ஊசியைத் தந்துவிட் டானென்றன் கைதனிலே. ௯

வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே. ௰

வேதத்தி னுட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை யோசெய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போல வெளிச்சம தாம்பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே. ௰௧

மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயில்மட்டே
இனமான சுற்றம் மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையாம ளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவம்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே. ௰௨

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே. ௰௩

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடைவையொன் றில்லாத போது பகலிரவாய்
ஈயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகல்
மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே. ௰௪

சீதப் பனிக்குண்டு சிக்கெனக் கந்தை இனம்பசித்தால்
நீதுய்க்கச் சோறு மனைதோறு முண்டு நினைவெழுந்தால்
வீதிக்குள் நல்ல விலைமாத ருண்டிந்த மேதினியில்
ஏதுக்கு நீசலித் தாய்மன மேயென்றும் புண்படவே. ௰௫

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்தம்
மாறுண்டு லாவி மயங்கிநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே. ௰௬

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொடுங்கிவந்தால்
தடுக்கப் பழைய வொருவேட்டி யுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தால்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே. ௰௭

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டெ னும்படி கேட்டுவிட் டோமினிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே. ௰௮

மாத்தா னவத்தையு மாயா புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டையுண் டோநித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே. ௰௯

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே. ௨௰

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே. ௨௧

என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே. ௨௨

திருவேட மாகித் தெருவிற் பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகப் பிச்சை பகருமென் றாயைப் பதம்பணிந்தேன்
கருவாகு மேதக் கடற்கரை மேவக் கருதுமென்னை
உருவாக்கிக் கொள்ளவல் லோவிங்ங னேசிவ னுற்றதுவே. ௨௩

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டுமி ரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்தொல்லை நான்மறைக்கும்
எட்டே னெனும்பர மென்னிடத் தேவந்திங் கெய்தியதே. ௨௪

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனி லேவியப் பொன்றுகண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. ௨௫

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கெனும் மிந்தமண்ணும்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந் நாறுடலைப்
பிரியமு டன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே. ௨௬

அண்ணல்தன் வீதி யரசிருப் பாகு மணிபடையோர்
நண்ணொரு நாலொன்ப தாமவ ரேவலும் நண்ணுமிவ்வூர்
துண்ணென் பசிக்கு மடைப்பள்ளி யான சுகமுமெல்லாம்
எண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே. ௨௭

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்று மில்லை உடையவனே. ௨௮

கறையற்ற பல்லுங் கரித்துணி யாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாத வூணும் புறந்திண்ணையும்
தறையிற் கிடப்பு மிரந்துண்ணு மோடுஞ் சகமறியக்
குறைவற்ற செல்வமென் றேகோல மாமறை கூப்பிடுமே. ௪௯

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்குமென்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பர் கருத்தில்வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே. ௫௦

வாய்நாறு மூழல் மயிர்ச்சிக்கு நாறிடு மையிடுங்கண்
பீநாறு மங்கம் பிணவெடி நாறும் பெருங்குழிவாய்ச்
சீநாறும் யோனி யழல்நாறு மிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறும் மங்கையர்க் கோவிங்ங னேமனம் பற்றியதே. ௫௧

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு தெருக்குப்பையில்
தரிக்கக் கரித்துணி யாடையு முண்டெந்தச் சாதியிலும்
இரக்கத் துணிந்துகொண் டேன்குறை யேது மெனக்
கில்லையே. ௫௨

ஏதப்பட் டாயினி மேற்படும் பாட்டையி தென்றறிந்து
போதப்பட் டாயில்லை நல்லோ ரிடஞ்சென்று புல்லறிவால்
வாதைப்பட் டாய்மட மாதர் கலவி மயக்கத்திலே
பேதைப்பட் டாய்நெஞ்ச மேயுனைப் போலில்லை பித்தருமே. ௫௩

சுரப்பற்று வல்வினை சுற்றமு மற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்று மங்கையர் கையிணைக் கற்றுக் கவலையற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற் றிருப்பதன் றோபர மாபர மானந்தமே. ௫௪

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போல் அனைவர்க்குந் தாழ்மைசொல்லிச்
சேய்போல் இருப்பர்கண் டீர்உண்மை ஞானந் தெளிந்தவரே. ௫௫

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீணைஇட்ட
முடக்கே புழுவந் துறையிட மேநல முற்றுமிலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கே யுனைச்சுமந் தேன்நின்னி னேது சுகமெனக்கே. ௩௬

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவரு மோசலி யாதிரென் னேழைநெஞ்சே. ௩௭

செல்வரைப் பின்சென் றுபசாரம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தின்
னெல்லையிற் புக்குநல் லேகாந்த மாயெனக் காமிடத்தே
அல்லலற் றென்றிருப் பேனுல கீழ லரும்பொருளே. ௩௮

ஊரீ ருமக்கோ ருபதேசங் கேளு முடம்படங்கப்
போரீர் சமனைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையில்
சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
வரீ ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே. ௩௯

நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டாய்
ஆற்றிற் கிடந்துந் துறையறி யாம லலைகின்றையே. ௪௰

ஓங்கார மாய்நின்ற வத்துவி லேஒரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தால்பதி னாலுலகும்
நீங்காமல் நீங்கி நிறையா நிறைந்து நிறையுருவாய்
அங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே. ௪௧

விதியார் படைப்பும் அரியார் அளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பும்நம் பால்அணு காது பரானந்தமே
கதியாகக் கொண்டுமற் றெல்லாந் துயிலில் கனவெனநீ
மதியா திருமன மேயிது காண்நன் மருந்துனக்கே. ௪௨

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரம்மதி யாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் தன்அருள் நோக்கங்கள் நோக்குதற்கே. ௪௩

நேமங்கள் நிட்டைகள் வேதங்கள் ஆகம நீதிநெறி
யோமங்கள் தர்ப்பணஞ் சந்தி செபமந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்கள் தோறும் இவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே. ௪௪

நானெனத் தனைபுத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே
ஏனிப் படிகெட் டுழலுகின் றாய்இனி ஏதுமில்லா
வானத்தின் மீனுக்கு வன்தூண்டில் இட்ட வகையதுபோல்
போனத்தை மீள நினைக்கின் றனைஎன்ன புத்தியிதே. ௪௫

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த ஐம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவம் என்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபரித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே. ௪௬

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடும்நாள்
நீயாரு நானு ரெனப்பகர் வார்அந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயும்ஒரு
பாயாரும் நீயும்அல் லால்பின்னை ஏதுநட் பாம்உடலே. ௪௭

ஆயும் பொழுது மயிர்க்கால்கள் தோறும் அருங்கிருமி
தோயும் மலக்குட்டை ஆகிய காயத்தைச் சுட்டுவிட்டால்
பேயும் நடனம் இடுங்கட மாம்என்று பேசுவதை
நீயும் அறிந்திலை யோபொருள் தேட நினைந்தனையே. ௪௮

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவன்அடிக் கல்லஎன் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே. ௪௯

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்கு
எட்டாத புட்பம் இறையாத தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன் றோகுரு நாதன் மொழிந்ததுவே. ௫௦

எருமுட்டை பிட்கின் உதிர்ந்திடுஞ் செல்லுக்கு எவரழுவார்
கருமுட்டை புக்குக் கழலகன் றீர்கன துக்கமதாய்ப்
பெருமுட்டுப் பட்டவர் போல்அழும் பேதையிர் பேத்துகிறீர்
ஒருமுட்டும் வீட்டு மரணும மென்றைக்கு மோதுமினே. ௫௧

மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையுஞ் செந்தீ
ஐயாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே. ௫௨

ஆயாய் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பால்
போயா கிலுமுண்மை யைத்தெரிந் தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்த தோளியர் காமவி காரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கின் றனைமன மேயென்ன பித்துனக்கே. ௫௩

அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொருக்கு மென்றினஞ் சார்ந்திலரே. ௫௪

ஆங்காரப் பொக்கசங் கோபக் களஞ்சிய மாணவந்தான்
நீங்கா வரண்மனை பொய்வைத்த கூடம்வின் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவிலாசமித் தேகங்கந்தல்
பாங்கா யுனைப்பணிந் தெப்படி ஞானம் பலிப்பதுவே. ௫௫

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்றநெஞ்சே
அழியாப் பதவிக் கவுடதங் கேட்டி யநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்திலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டுமென்றே. ௫௬

நாய்க்கொரு சூலு மதற்கோர் மருத்துவம் நாட்டிலுண்டோ
பேய்க்கொரு ஞானம் பிடிபடு மோபெருங் காஞ்சிரங்காய்
ஆக்குவ ரார தருந்துவ ரார்து போலுடம்பு
தீக்கிரை யாவதல் லாலேதுக் காமிதைச் செப்புமினே. ௫௭

கச்சிற் கிடக்குங் கனதனத் திற்கடைக் கண்கள்பட்டே
இச்சித் திருக்கின்ற வேழைநெஞ் சேயிம வான்பயந்த
பச்சைப் பசுங்கொடி யுண்ணு முலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமன மேயொரு காலுந் தவறில்லையே. ௫௮

மாணுர் விழியைக் கடந்தேறி வந்தனன் வாழ்குருவும்
கோணுகி யென்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுநற் பேறிது பொய்யன்றுகாண்
ஆனாலு மிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே. ௫௯

சற்றாகினுந் தன்னைத் தானறி யாய்தனை யாய்ந்தவரை
யுற்றா கிலுமுரைக் கப்பொருந் தாயுனக் கானதில்லை
பற்றாய் குருவைப் பணியாய் பரத்தையர் பாலிற்சென்றென்
பெற்றாய் மடநெஞ்ச மேயுனைப் போலில்லை பித்தனுமே. ௬௦

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றாகி லேனுயர் பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண் டுள்ளே யிருத்துவ துண்மையென்று
வெளியிட் டடைத்துவைத் தேனினி மேலொன்றும்
வேண்டிலனே. ௬௧

---

# திருவிடைமருது

## வெண்பா

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேடல்
என்று விடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து. ௧

## திருவொற்றியூர்

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல வழகியதாங்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு. க

ஓடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்தும்
தேவாதி தேவன் றிருவொற்றி யூர்த்தெருவில்
போவா ரடியிற் பொடி. உ

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர். ௩

ஆரூர ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்று
ஊரூர்கள் தோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்காள் நீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர். ௪

எருவாய்க் கிருவிரன்மே லேருண் டிருக்கும்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடுந் தாரைக்கே நீ. ரு

## திருவேகம்பம்

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனை தாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றேன்—நித்தம்
எனக்குக் களையாற்றா யேகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ. க

## திருக்கச்சிக்காரோணம்

அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோண ரே. க

## திருக்காளத்தி

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரே யென்று யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு. க

## திருவிருப்பையூர்

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னைக்
கருப்பையூர் வாராமற் கா. க

## திருவையாறு

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்
கையாற வும்மடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா திருவையா று. க

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு. க

## பொது

சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சம்
கறந்திடத்தை நாடுதே கண். க

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
என்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனான்
உன்னை நினைத்தா லுதை. உ

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்கு
ஆசைப் படுவதில்லை யண்ணலே—ஆசைதனைப்
பட்டிறந்த காலமெல்லாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல். ௩

நச்சரவம் பூண்டானை நன்றாத் தொழுவதுவும்
இச்சையிலே தானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம். ௪

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகே னரனேயென் தேகம்
இளைத்தாலும் போகே னினி. ௫

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம். ௬

ஆவியொடு காய மழிந்தாலும் மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. ௭

இப்பிறப்பை நம்பி யிருப்பரோ நெஞ்சமே
வைப்பிருக்க வாயில் மனையிருக்கச்—சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. ௮

மேலு மிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலம தறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப் பட்டவுடல்
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு. ௯

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்கள்
தத்தித்தத் திச்சட்டைத் தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு. க0

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை—முன்னம்
எரிந்தகட்டை மீதி லிணைக்கோ வணத்தை
உரிந்துருட்டிப் போட்டது கண்டு. கக

முதற்சங் கமுதூட்டும் மொய்குழலார் தம்மை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டுங்—கடைச்சங்கம்
ஆம்போ தனவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம். கஉ

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே. க௩

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீர்—எச்சில்தனை
உய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்த நிராமயமா மே. கச

எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய். கரு

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான். க௬

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். ௧௭

மாலைப் பொழுதில்நறு மஞ்சளரைத் தேகுளித்து
வேலைமினக் கிட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்ருள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானு லென்செய்வாள் பின். ௧௮

## தாயாருக்குத்

### தகனக்கிரியை செய்கையிற் பாடிய

### வெண்பா

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி. ௧

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன். ௨

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன். ௩

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன். ௪

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு. ௫

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு. ௬

## விருத்தம்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே. ௭

## வெண்பா

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேனையகோ—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. ௮

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய். ௯

வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்— பால்தெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். ௧௦

# திருவெண்காட்டுத் திருவிசைப்பா

பூதமுங் கரணம் பொறிகளோம் புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமுங் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்குநா ளுளதோ
வாதமுஞ் சமய பேதமுங் கடந்த
மனோலய வின்பசா கரமே
ஏதுமொன் றறியேன் யாதுநின் செயலோ
யிறைவனே யேகநா யகனே. க

யாவரே யிருந்தும் யாவரே வாழ்ந்தும்
யாவரே யெமக்குற வாயுந்
தேவரீ ரல்லாற் றிசைமுக மெனக்குத்
திருவுள மறியவே றுளதோ
பாவல னொருவன் செந்தமிழ்க் கிரங்கிப்
பரவையா ரூடலை மாற்ற
ஏவலா ளாகி யிரவெலா முழன்ற
விறைவனே யேகநா யகனே. உ

உண்டதே யுண்டு முடுத்ததே யுடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே யுரைத்தும்
கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங்
கழிந்தன கடவுள்நா ளெல்லாம்
விண்டதா மரைமே லன்னம்வீற் றிருக்கும்
விழவறா வீதிவெண் காடா
அண்டரே போற்ற வம்பலத் தாடு
மையனே யுய்யுமா றருளே. ௩

சிலர் வேண்டுகோளால் ஒரு திருமணவீட்டிற் சென்று
மணமக்களைப் பார்த்துப் பாடிய

## திருவிருத்தம்

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி நலமொன்று
மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்கப் பொய்யுரைத்துப் புற்றீசல் போலப் புலபுலெனக்
கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வழியறியீர் கைவிடவும் மாட்டீர் கவர்பிளந்த மரத்
துளையிற் காலுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப் போல அகப்பட்டீர்
கிடந்துழல அகப்பட்டீரே. க

## உடற்கூற்று வண்ணம் *

தனதன தான தனதன தான
தந்தன தந்தன தந்த தனந்த
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த—
தந்ததன தான தனதானா.

ஒருமட மாது மொருவனு மாகி
யின்பசு கந்தரு மன்பு பொருந்தி
யுணர்வு கலங்கி யொழுகி யவிந்து
ஊறுசு ரோணித மீதுக லந்து
பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்துபு குந்து திரண்டு
பதும வரும்பு கமட மிதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைக ளென்ற—
உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்றுநி றைந்து மடந்தை

* இதனை அருணகிரிநாதர் பாடினரெனவுங் கூறுவர்.

யுதர மகன்று புவியில் விழுந்து
　　யோகமும் வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள் சேனை தரவணையாடை
　　மண்படவுந்தியுதைந்து கவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுத மருந்தி
　　யோரரி வீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகை யூற லிதழ்மட வாரு
　　வந்துமுகந்திட வந்து தவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
　　வாவிருபோவென நாமம்விளம்ப
உடைமணியாடை யரைவட மாட
　　வுண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
　　தேடிய பாலரொடோடிநடந்து
　　　அஞ்சுவயதாகி விளையாடியே; $(\frac{1}{4})$

உயர்தரு ஞான குருவுபதேச
　　முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும் விளம்ப
　　வாழ்பதிறுபி ராயமும் வந்து—
மயிர்முடி கோதி யறுபத நீல
　　வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
　　மாகதர் போகதர் கூடிவணங்க—
மதன சொரூபனிவனெனமோக
　　மங்கையர் கண்டுமருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
　　மாமயில் போலவர் போவது கண்டு
மனதுபொறுமலவர்பிற கோடி
　　மங்கல செங்கல சந்திகழ்கொங்கை
மருவ மயங்கியிதழமுதுண்டு
　　தேடிய மாமுதல் சேரவழங்கி—

ஒருமுத லாகி முதுபொரு ளாயி
ருந்தத னங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறுபி ரிந்து—
வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல்வி ழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோதம டைந்து—
செங்கையினி லோர்த டியுமாகியே ; (½)

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதி மிர்வந்து
வாயறி யாமல்வி டாமல்மொ ழிந்து—
துயில்வரு நேர மிருமல் பொருது
தொண்டையும் நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு—
கலியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்ச லமிஞ்ச
கலக லவென்று மலச லம்வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து—
தெளிவுமி ராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்சமு லைந்து மருண்டு
திடமு மலைந்து மிகவு மலைந்து
தேறிந லாதர வேதென நொந்து—
மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்தம்
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற—
கடன் முறைபேசு மெனவுரை நாவு
றங்கிவி ழுந்துகை கொண்டு மொழிந்து

கடைவ ழிகஞ்சி யொழுகி டவந்து
    பூதமு நாலுசு வாசமு நின்று—
        நெஞ்சுதடு மாறி வருநோமே. (¾)

வளர்பிறை போல வெயிறுமு ரோம
    முஞ்சடை யுஞ்சிறு குஞ்சி யும்விஞ்ச
மனது மிரண்ட வடிவு மிலங்க
    மாமலை போல்யம தூதர்கள் வந்து—
வலைகொடு வீசி யுயிர்கொடு போக
    மைந்தரும் வந்துகு னிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
    மாழ்கின ரேயிவர் காலம றிந்து—
பழையவர் காணு மெனுமய லார்கள்
    பஞ்சுப றந்திட நின்றவர் பந்தர்
இடுமெ னவந்து பறையி டமுந்த
    வேபிணம் வேகவி சாரியு மென்று—
பலரையு மேவி முதியவர் தாமி
    ருந்தச வங்கழு வுஞ்சி லரென்று
பணிது கில்தொங்கல் களப மணிந்து
    பாவக மேசெய்து நாறு முடம்பை—
வரிசைகெ டாம லெடுமென வோடி
    வந்திள மைந்தர்கு னிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
    மானிட வாழ்வென வாழ்வென நொந்து—
விறகிடை மூடி யழல்கொடு போட
    வெந்துவி ழுந்துமு றிந்து நிணங்கள்
உருகி யெலும்பு கருகி யடங்கி
    யோர்பிடி நீறு மிலாத வுடம்பை—
        நம்புமடி யேனை யினியாளுமே. (1)

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


அஞ்சக்கர ௱௮
அஞ்சரத்தான் ௬௰
அடி ஆயிரந் ௫௫
அடிசார்ந்தவர் ௫௨
அடிநின்ற ௫௮
அடியாருறவு ௱௯
அடியார்க்கெளி ௯௭
அடியொன்று ௨
அடிவலப் ௬௪
அட்டாங்க ௱௫
அண்ணல்தன் ௱௫
அத்தனை ௯௮
அத்திமுத ௱௧௧
அத்தமும் ௱௩
அப்பென்றும் ௯௧
அரிசியோ ௱௧௬
அரிதன்றிரு ௬௰
அருளின் கடல் ௨௰
அருளுவாழி ௧௩
அருளைத்தரு ௬௰
அருள்பழுத் ௨௧
அல்லல் ௮
அழுதாற் ௱௭
அம்பரங்கால் ௬௩
அம்பலவர் ௰௨
அழகறிவிற் ௬௩
அழலுக்குள் ௯௫
அளவினில் ௭௮
அள்ளியிடுவ ௱௧௬
அன்றினர் ௪௭
அன்றும் ௬௨
அன்றென்றும் ௪௮
அன்னவிசார ௯௰
அன்னை ௯௫
அறந்தாணி ௮௯
அறிவில் ௬
ஆகுவாகந ௨௮
ஆங்கார ௱௯
ஆதரித்த ௨
ஆயாய் ௱௯
ஆயும்புகழ் ௯௬
ஆயும்பொழு ௱௮
ஆரண ௨௰
ஆரூரரிங் ௱௰௧
ஆவியொடு ௱௧௩
ஆலையங்கார் ௬௭
ஆறுண்டு ௱௪
ஆற்றிற்கரை ௯௨
ஆற்றோடு ௯௮
ஆனேறே ௧௬
இடத்துறை ௭௫
இடவம் ௬௫
இடைக்கு ௬௫
இப்பிறப்பை ௱௧௩
இயங்குந் ௬௨
இருக்குமிடந் ௱௧௩
இருக்கும் மரு ௫௪
இருநில ௭௪
இருப்பது ௱௧௪
இருளந்தகன் ௩௨
இரைக்கே ௱
இலவவெங் ௬௮
இலவிதழ் ௩
இல்லந்துற ௱

இழையார் ௭௰
இறைத்தார் ௬௬
இனியவர் ௬௫
இன்றிருந்து ௫௫
இன்றுசெய் ௭௩
இன்றெனை ௨௬
இன்னம் ௱௧௪
ஈரவேரி ௧௫
உடுக்கக் ௱௪
உடுப்பானும் ௯௭
உடைகோ ௱௨
உடைப்புலி ௬௪
உடைமணி ௪௫
உண்டதே ௱௧௮
உத்துங்க ௬௩
உயிராயின ௭௧
உருவாம் ௭௫
உரைக்கை ௱௬
உரையின் ௧
உலவிய ௭௧
உலவு சலதி ௯
உவரச் சொல் ௬௯
உழப்பின் ௪௪
உளியிட்ட ௱௰
உள்வார் ௭௰
உள்ளம் ௬௨
உறுகின்ற ௬௭
ஊட்டுவி ௯௬
ஊரீருமக் ௱௭
ஊருஞ்சத ௯௰
ஊற்றை ௯௨
எச்சிலென்று ௱௧௪
எட்டுத்திசை ௱௬
எத்தனைநாள் ௱௧௪
எத்தனைபேர் ௱௯௪
எத்தனையூ ௱௧௧
எத்தொழிலை ௱௧௫
எம்மையும் ௬௰
எரியெனக் ௱௫
எருமுட்டை ௱௯
எருவாய் ௱௧௧
எல்லாம் ௯௪
எழுமலர் ௭௨
எனவே ௨௪
என்செய ௱௫
என்பெற்ற ௱௫
என்னும் ௧௧
ஏகம்பனே ௫௮
ஏதப்பட் ௱௬
ஐயிரண்டு ௱௧௬
ஐயுந்தொடர் ௯௮
ஒடுவிழுந்து ௱௧௧
ஒருமட ௱௧௯
ஒழிந்த ௭
ஒழியா ௱௯
ஒளிவந்த ௨௧
ஒற்றியூர ௭௯
ஒன்பது ௱௧௪
ஒன்றிலே ௪௰
ஒன்றென்றிரு ௱௪
ஓங்கார ௱௭
ஓங்கின ௭௰
ஓடும் ௯௬
ஓடாமல் ௯௫
ஓயாமற் ௯௧
ஓராதே ௪௭
கச்சார் ௭௰
கச்சிற் ௱௰

கடலான ௨௨
கடுஞ்சொல் ௯௪
கட்டியணை ௮௯
கண்டங்கரி ௱௰௧
கண்டேன் ௨௮
கண்ணின் ௬௨
கண்ணுண்டு ௱௨
கண்ணொன்றும் ௪௧
கதியாவது ௪௧
காத்தத் ௩௪
காத்தினில் ௫௭
கருமுதல் ௨௰
கருவெனும் ௩
கல்லாப்பிழை ௯௰
கல்லார்சிவ ௯௨
களிவந்தமு ௧
கறையற்ற ௱௩
கற்றைப் ௩௬
காடேதிரி ௯௯
காடோடெசடி ௯௯
காட்டிவை ௭௬
காணீர் ௪௫
காதலைக்கும் ௩௪
காதளவோடிய ௮௬
காதென்று ௯௰
காம்பிணங்கு ௯௫
கார்மிக்க ௩௯
கார்முகம் ௭௧
கார்விடை ௭௧
காலற்சீறி ௮௰
காலன்வரு ௱௧௨
காலைஉபாதி ௯௩
காழிக்கு ௬௰
கான்சாயும் ௱
கிடக்கும் ௩௬
கிழவரு ௩
கிறிபல ௩௫
குடை ௧
கும்பிட்ட ௨௮
கூறுஞ் ௬௰
கூறுமின் ௩௩
கைப்பிடி ௮௯
கையார ௱௧
கையொன்று ௱௨
கொண்டலின் ௫௫
கொண்டல் ௧௩
கொல்லாமல் ௯௩
கொள்ளுங்கடு ௩௮
கொன்றேன் ௯௪
சங்கிடத்தான் ௭
சடக்கட ௯௬
சடைமேல் ௫௬
சதுர்முகன் ௧௭
சந்து ௪
சற்றுகினுங் ௱௰
சார்ந்தவர் ௨௪
சிறைவண்டு ௩௯
சிற்றம்பல ௱௧௨
சினந்தனை ௱௧
சீதப்பனி ௱௪
சீயுங்குருதி ௱௬
சீறும்வினை ௯௧
சுடப்படு ௯௮
சுடர்விடு ௫௪
சிரப்பாற்று ௱௩
சூதுற்ற ௱௬
செய்யதிரு ௭
செருக்குட ௬௰

| | | | |
|---|---|---|---|
| செல்வரைப்பின் | ௱௧ | நச்சரவம் | ௱௧௩ |
| செல்வரைப்பின் | ௱௭ | நஞ்சுமிழ் | ௩ |
| சென்றேறி | ௬௭ | நடமாடி | ௩ |
| சேய்தந்த | ௬௧ | நடனம் | ௬௪ |
| சொக்கிட்டா | ௯௪ | நண்ணிப் | ௬௭ |
| சொல்லால் | ௯௩ | நலந்தர | ௫௯ |
| சொல்லிலுஞ் | ௱௨ | நல்கும் | ௬௬ |
| சோறிடும் | ௯௫ | நல்லாய் | ௯௩ |
| தம்மைப் | ௬௧ | நல்லாரிணக் | ௮௯ |
| தரம்பொற் | ௬௪ | நள்ளிரிற் | ௮௯ |
| தரித்தேன் | ௫௮ | நன்னுதலார் | ௬௯ |
| தருக்க | ௬௪ | நாடிக்கொண் | ௱௨ |
| தருமருட் | ௬௩ | நாட்டமென் | ௱௪ |
| தவியா | ௯௭ | நாப்பிளக்க | ௱௧௯ |
| தளரா | ௭௰ | நாமத்தினால் | ௬ |
| தனமிட்டு | ௫௯ | நாமம்நவி | ௫௧ |
| தன்மையிற் | ௫௯ | நாமேஇடை | ௪௭ |
| தாயாருஞ் | ௱௮ | நாயனைய | ௰ |
| தாயும் | ௯௯ | நாயாய்ப் | ௯௨ |
| தானேபிற | ௩ | நாய்க்கு | ௱௮ |
| திருமால் | ௮௬ | நாய்க்கொரு | ௱௰ |
| திரியப்புர | ௬௧ | நாலின்மறை | ௯௭ |
| திருவளர் | ௰௯ | நாவார | ௯௨ |
| திருவேட | ௱௫ | நாறுங் | ௱ |
| துணைத்தா | ௬௩ | நாறுமுட | ௯௩ |
| துணையொத் | ௬௮ | நானெத்தனை | ௱௮ |
| தூமதி | ௭௭ | நிலத்திடை | ௭௮ |
| தெய்வச் | ௯௭ | நிலத்திமை | ௬௨ |
| தெய்வத்தா | ௩௮ | நிலாவு | ௬௭ |
| தெளிதரு | ௫௮ | நினைமின் | ௮௨ |
| தேடுற்றில | ௬௬ | நினையார் | ௧௨ |
| தொடரா | ௧௬ | நினைவார் | ௬௭ |
| தொழுவாள் | ௨௨ | நீரென் | ௭௧ |
| தோடவிழும் | ௱௧௨ | நீறுர் | ௱௧ |

நீற்றை ௱௭
நெஞ்சார் ௬௮
நெருப்பான ௯௮
நெறிதரு ௬
நேமங்கள் ௱௮
நேர்த்தமை ௬௯
நொந்து ௱௧௬
நோக்கிற்று ௪௯
பணமஞ்ச ௫௭
படையால் ௬௨
பட்டைக் ௱௫
பத்தும் ௯௯
பரப்பார் ௭௰
பரிப்பருங் ௬௮
பருத்திப் ௯௧
பருப்பதங் ௬௬
பருமுத்து ௬௰
பரவித்தலை ௬௩
பாங்குடைக் ௬௩
பாதம் பரவி ௭௫
பாராமல் ௯௬
பாற்கடல் ௮௩
பிறக்கும் ௯௰
பிறந்து ௯௫
பிறவா ௯௭
பிறிந்தேன் ௪௪
புண்ணிய ௪௯
புணங்குழை ௬௨
பூங்கொத் ௩௯
பூணும் ௱௮
பூதங்க ௬௫
பூதமுங் ௱௧௮
பூமேல் ௧
பெண்ணுகி ௯௨
பெயரா ௬௧
பெருமானே ௫௪
பெறுகின்ற ௰௨
பெறுவது ௫௨
பெற்றுகந் ௩௮
பெற்றோர் ௯
பேசுகயா ௬௧
பேசுவாழி ௧௧
பேதை ௯
பேய்போற் ௱௬
பொய்யை ௱௧௨
பொய்வரும் ௭௨
பொருளாசை ௨௩
பொருளுங் ௪௰
பொருளுடை ௯௧
பொருளுணர்ந் ௭௬
பொல்லா ௬௧
பொல்லாதவ ௮௯
பொன்னுற் ௯௯
பொன்னை ௯௪
போதும் ௨௪
போற்றும் ௨௬
மணியார் ௬௬
மணிவாய் ௧௧
மண்ணுங் ௱௧௨
மந்திக் ௱௧
மயக்கத்த ௭௨
மயக்கமில் ௭௬
மலர்ந்த ௬௪
மலையத்த ௬௬
மனையாளும் ௱௫
மாடுண்டு ௱௪
மாதாவுடல் ௱௧௨
மாத்நான ௱௪

| | | | |
|---|---|---|---|
| மாயநாட் | ௯௰ | வரையொன்று | ௪ |
| மாலைப்பொழு | ௱௧௫ | வழிபிழை | ௫௭ |
| மானார்விழி | ௱௰ | வளையார் | ௫௧ |
| மானும் மழு | ௨௰௧ | வனவரித் | ௬௮ |
| மானைக்கல | ௩௭ | வாசற்படி | ௱௧௫ |
| மின்கனென் | ௫௯ | வாதுக்குச் | ௯௩ |
| மின்நலி | ௬௯ | வாதுற்ற | ௱௫ |
| முகம்பாகம் | ௭௨ | வாய்நாறு | ௱௬ |
| முடிசார்ந்த | ௯௬ | வாவி | ௱௧௧ |
| முட்டற்ற | ௯௫ | வாழப் | ௬௭ |
| முதற்சங்க | ௱௧௪ | வாழ்ந்த | ௪௨ |
| முந்தித்தவ | ௱௧௬ | வாழ்வாக | ௧௪ |
| முப்போது | ௱ | வாளான் | ௱ |
| முன்னையிட்ட | ௱௧௭ | வானமுத | ௯௨ |
| மெய்த்தொண்டர் | ௫௮ | வானோர் | ௧௪ |
| மென்று | ௱௰ | விடக்கே | ௱௭ |
| மேயிரை | ௭௨ | விடப்படு | ௱௧ |
| மேலுமிரு | ௱௧௩ | விடைபாய் | ௭௨ |
| மேவியபுன் | ௪௬ | விடையம் | ௩௪ |
| மையாடு | ௱௯ | விட்டுவிட | ௱௧௫ |
| யாவரோ | ௱௧௮ | விட்டேனுல | ௱௫ |
| வகுப்பார் | ௬௨ | விதியார் | ௱௭ |
| வசையில் | ௨௨ | வித்தாரம் | ௯௭ |
| வட்டிலிலுங் | ௱௧௬ | விருந்தாக | ௯௪ |
| வணக்கந்தலை | ௫௮ | விளம்புவன் | ௫௪ |
| வணங்குமிடை | ௧௪ | வினைப்போக | ௱௨ |
| வந்திக்கண் | ௪௪ | வீடுநமக்கு | ௱௨ |
| வந்தும் | ௬௧ | வீற்றிருந்தா | ௱௧௭ |
| வரங்கொண் | ௭௧ | வெட்டாத | ௱௯ |
| வரிக்கோல | ௯௰ | வெந்தாளோ | ௱௧௭ |
| வருத்தந்தரு | ௫௯ | வேகுதே | ௱௧௭ |
| வருந்தேதல் | ௱௧ | வேதத்தி | ௱௫ |
| வருந்தேன் இற | ௪௰ | வையார்மழு | ௬௰ |